விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதின்னான்கு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 கார்த்திகை 08 செவ்வாய்க்கிழமை (24.11.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 340




# ஜனாதிபதித் தேர்தலே முதலில்

# கட்சித்தலைவர்களுக்கு அறிவிப்பு

## திகதியை தேர்தல் ஆணையாளரே வெளியிடுவார்

(கொழும்பு)



முதலில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சித்தலைவர்களுக்கு அறிவித்துள்ளார். இதே வேளை தேர்தல் நடைபெறும் திகதி, வேட்பு மனு தாக்கல் என்பன குறித்து தேர்தல் ஆணையாளர் இன்று அறிவிப்பார். நேற்று அலரி மாளிகையில் நடைபெற்ற விசேட கூட்டம் ஒன்றில் ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## நாளை...

தென் மாகாண கல்வி வலய ஆசிரியர்களினால் தயாரிக்கப்பட்ட க.பொ.த. சாதாரண தர பரீட்சை 'வரலாறு' பாட மாதிரி வினாத்தாள். உங்கள் பிரதிக்கு முந்துங்கள்.

# இலங்கையில் தேர்தல் முடிந்ததும் வடக்கு-கிழக்கு இணைக்கப்படும்!

## இந்தியாவிடம் ஜனாதிபதி உறுதி

(கொழும்பு)

இலங்கையின் வடக்குக்கிழக்கை இணைப்பதற்கு அரசாங்கம் இணங்கியுள்ளதாக தெரிய வந்துள்ளது. இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜிக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பின்போது இது தொடர்பில் மகிந்த ராஜபக்ஷ தனது இணக்கத்தை வெளிப்படுத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கான அடிப்

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஊடக பிரமுகர்களுடன் ஜனாதிபதி இன்று பேச்சு

(கொழும்பு)

அரச மற்றும் தனியார் ஊடகங்களின் ஆசிரியர்கள் அதன் உரிமையாளர்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அலரி மாளிகைக்கு அழைத்து பேச்சுவார்த்தைகளை நடத்த தீர்மானித்துள்ளார். இதனடிப்படையில் ஊடக பிரதானிகளை இன்று முற்பகல் அலரி மாளிகைக்கு வருமாறு ஜனாதிபதி செயலகம் அழைப்பு விடுத்துள்ளது.

ஜனாதிபதி

(14ஆம் பக்கம் பார்க்க)

## பொதுச்சின்னத்தில் போட்டியிட ஜெனரல் பொன்சேகா இணக்கம்

(கொழும்பு)



பிரதான எதிர்க்கட்சிகளின் சின்னங்களை தவிர்த்து சரத் பொன்சேகா பொதுச் சின்னத்தில் எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிட இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டு 24 மணிநேரத்திற்குள் அது குறித்து உத்தியோகபூர்வமாக நாட்டுக்கு அறிவிக் கத்திட்டமிடப்பட்டுள்ளது எனவும் தகவ

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி-ஜெனரல் பொன்சேகா நேற்று விசேட பேச்சுவார்த்தை

(கொழும்பு)

ஜே.வி.பியின் பிரதிநிதிகளுக்கும் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கும் இடையில் நேற்று விசேட பேச்சுவார்த்தையொன்று நடைபெற்றுள்ளதாக ஜே.வி.பியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜே.வி.பியின் முக்கியஸ்தர்கள் சிலர் கலந்து கொண்ட இந்த சந்திப்பு தொடர்பான தகவல்கள் இன்று வெளியிடப்படும் எனவும் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஜெனரல் சரத் பொன்சேகாவை ஜனாதிபதித் தேர்தலில்

(14ஆம் பக்கம் பார்க்க)

## முப்படைகளும் உஷார் நிலையில்

(கொழும்பு)

வன்னி, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளில் இராணுவ பாதுகாப்பை அரசு பலப்படுத்தி இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடற்கரை

(14ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை அரசு மீது அழுத்தம் கொடுக்க இந்தியாவை அமெ. வலியுறுத்த வேண்டும்

## அனைத்துலக மன்னிப்புச்சபை கோரிக்கை

(வாசிங்டன்)

தடுப்பு முகாம்களில் உள்ள தமிழர்களை 6 மாதங்களிற்குள் விடுவிப்பதாக இலங்கை அரசு தனக்கு வழங்கிய உறுதிமொழியை நிறைவேற்றுமாறு இந்தியா அந்த நாட்டினை அழுத்த வேண்டும் என பிரதமர் மன்மோகன் சிங்கிடம் வலியுறுத்துமாறு அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவிடம் அனைத்துலக மன்னிப்புச் சபை கேட்டுக் கொண்டுள்ளது. இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் நான்கு நாள் பயணமாக

(14ஆம் பக்கம் பார்க்க)






சத்திய சாயிபாபாவின்84ஆவது பிறந்ததினமான நேற்று அவர் பக்தர்களுக்கு ஆசி வழங்குவதையும்கேக்வெட்டி பிறந்த நாள் கொண்டாடுவதையும் படங்களில் காணலாம்.

## அரசாங்க ஊழியர்களை

# வன்னிக்கு திரும்புமாறு அழைப்பு; பாஸ் வழங்க படையினர் மறுப்பு!

(யாழ்ப்பாணம்)

வன்னிப்பகுதியில் கடமையாற்றி தற்போது யாழ். மாவட்டத்தில் மீளக்குடியேறியுள்ள அரச அலுவலர்களுக்குப் படையினர் பயண அனுமதி வழங்க மறுத்ததால் அவர்கள் உடனடியாகக் கடமைக்குத் திரும்ப முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. அரச ஊழியர்கள் அனைவரையும் உடன் வன்னிக்கு திரும்புமாறு ஆளுநர் அறிவித்திருந்தார்.

இதனால்

(14ஆம் பக்கம் பார்க்க)

## துவிசக்கரவண்டி திருடிய இளைஞன் பிடிக்கப்பட்டு நையப்புடைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப்பகுதியில் துவிச்சக்கர வண்டி ஒன்றை திருடிய இளைஞன் ஒருவர் மடக்கிப் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டார்.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் 3.40 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

யாழ்.நகரின் கஸ்தூரியார் வீதியில் ராஜா தியேட்டரிற்கு அண்மையிலுள்ள மதுபான சாலைக்கு முன்பாகநின்றதுவிச்சக்கர வண்டியை குறிப்பிட்ட இளைஞன் எடுத்துக் கொண்டு சென்றவேளையில் துவிச்சக்கர வண்டியின் உரிமையாளர் பின்தொடர்ந்து வந்ததையடுத்து குறித்த இளைஞன் துவிச் சக்கர வண்டியை நிறுத்தி பாதணிகளையும் கழற்றிவிட்டு தப்பித்துச் சென்று ஒளிந்து கொண்டார்.

இந்நிலையில் யாழ்.நகர் வர்த்தகர்கள் குறித்த இளைஞனை அடையாளம் கண்டதை யடுத்து அப்பகுதியில் நின்ற இளைஞர்களால் அவர் பிடிக்கப்பட்டு நையப்புடைக் கப்பட்டார். இச்சம்பவத்தால் கஸ்தூரியார் வீதியில் சிறிது நேரம் போக்குவரத்து நெரிசல் காணப் பட்டது. (ச-14,7)

## பூநகரியில் வியாபாரம் ஆரம்பிக்க நிதியுதவி- ஆளுநர் அறிவிப்பு

(திருகோணமலை)

துணுக்காய், பூநகரி பகுதிகளில் வியாபார நடவடிக்கைகளை ஆரம்பிப்பவர்களுக்கு கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊடாக நிதியுதவி வழங்கப்படுமென வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந் திரசிறி அறிவித்துள்ளார். இது தொடர்பில் நேற்று வடக்கு மாகாண சபையில் நடைபெற்ற விஷேட மாநாட்டில் ஆளுநர் இவ் அறிவிப்பை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது, முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் பகுதியிலும், கிளிநொச்சி மாவட்ட பூநகரிப் பகுதியிலும் மக்கள் குடியமர்த்தப்பட்டு அரச நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அப்பகுதிகளில் தேநீர்ச் சாலை, சைக்கிள் திருத்தகம், புடைவைக்கடை, பாடசாலை உபகரணங்கள் விற்பனை நிலையம், மரக்கறி,மீன்வகைகள் விற்பனை நிலையம் உட்பட அத்தியாவசிய பொருட்கள் விற்பனை என்பன இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை. எனவே மேற்படி வியாபார நடவடிக்கைகளை ஆரம்பிப்பவர்களுக்கு கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊடாக ஆரம்ப நிதியுதவி வழங்கப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல்ஜி.ஏ.சந்திரசிறிகுறிப்பிட்டுள்ளார். (ச-5)



வட்டு.இந்துக் கல்லூரிக்கு பிரதி கல்வி அமைச்சர் விஜயம் மேற்கொண்டபோது வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் மங்கல விளக்கேற்றுவதையும், பிரதிக் கல்வி அமைச்சர் சச்சிதானந்தம், பிரதி கல்வி அமைச்சரின் சிரேஷ்ட ஆலோசகர் நா.தணிகாசலம்பிள்ளை ஆகியோர் உரையாற்றுவதையும், பிரதி கல்வி அமைச்சர் கணனி கொள்வனவு பத்திரத்தை கல்லூரி அதிபர் திருமதி ஜெ.அருள்மயத்திடம் ஒப்படைப்பதையும் படங்களில் காணலாம்.

## இலங்கை அதிபர் சேவை தரம் III
## எழுத்துப் பரீட்சையில் 94 புள்ளி பெற்றோரை நேர்முகத்தேர்வில் கலந்து கொள்ளப்பணிப்பு

(கொழும்பு)

இலங்கை அதிபர்சேவைதரம் IIIக்கு பதவியுயர்வு வழங்குவதற்காக நடத்தப்பட்ட எழுத்துப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை ஆகியவற்றில் 142 புள்ளிகளைப் பெற்றதுடன் எழுத்துப் பரீட்சையில் மாத்திரம் 94 புள்ளிகளைப் பெற்றவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு சமுகம் தருமாறு கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இத்தகவலை வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தகவல் தருகையில்,

இலங்கை அதிபர் சேவை தரம் IIIக்கு பதவி உயர்வு வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சை கல்வியமைச்சில் நடைபெற்று வருகிறது. இந்நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப் பட்ட யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பரீட்சார்த்திகளை கல்வியமைச்சில் நடைபெறும் நேர் முகத் தேர்வுக்கு சமுகம் அளிக்குமாறு கேட் கப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கை அதிபர் சேவை தரம் IIக்குபதவியுயர்வு வழங்குவதற்காக ஏற்கனவே நடத்தப்பட்ட எழுத்துப் பரீட்சை,நேர்முகப் பரீட்சை ஆகியவற்றில் மொத்தமாக 142 புள்ளிகளை எடுத்திருப்பதுடன், அதில் எழுத் துப் பரீட்சை யில் மாத்திரம் 94 புள்ளிகளைப் பெற்றுள்ளவர்களும் நேர்முகப் பரீட் சைக்கு சமுகம் அளிக்குமாறு கல்வியமைச்சு அறிவித் துள்ளது.இவ்வாறு புள்ளிகளைப் பெற்றுள்ளவர்கள் அழைப்புக் கடிதம் கிடைக்கா விடினும் நேர் முகப் பரீட்சைக்கு உடனடியாக சமுகம் அளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளதாகவும் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா குறிப்பிட்டார். (ச-5)



யாழ்.திருக்குடும்பக் கன்னியர்மடம் பாடசாலையின் "வணிகத்தளிர்-10" நூல் வெளியீட்டு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யாழ்.உயர் தொழில் நுட்ப நிறுவன சிரேஷ்ட விரிவுரையாளர் கே.கதிரமலை உரையாற்றுவதையும்,வணிக மன்றத் தலைவர் தேனுகா ஜெறோமியஸ்,ஆய்வுரை நிகழ்த்திய திருமதி த.ரவீந்திரன், உப அதிபர் திருமதி சி.இராஜரட்ணம்,அதிபர் அருட்சகோதரி மேரிதஸ் நெவிஸ் லடிஸ் லஸ், வணிகமன்ற பொறுப்பதிகாரி திருமதி பி.திருஞானசம்பந்தன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

## தொலைபேசியில் குடும்பப் பெண்ணுக்கு தொந்தரவு கொடுத்த இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

குடும்பப்பெண் ஒருவரின் கையடக்கத் தொலைபேசிக்கு அழைப்பெடுத்து தகாத முறையில் உரையாடிய இளைஞன் ஒருவன் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கந்தரோடையைச் சேர்ந்த குடும்பப் பெண் ஒருவருடன் தகாத வார்த்தைகளைப் பயன்படுத்தி இளைஞன் ஒருவர் நீண்ட காலமாக தொந்தரவு கொடுத்து வந்துள்ளார்.

இது குறித்து பிரஸ்தாப பெண்ணினால் சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று மதியம் சிவில் உடையில் ரோந்து சென்ற பொலிஸார் சுன்னாகம் நகரப் பகுதியில் வைத்து அவ்விளைஞனைக் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர். இவர் அளவெட்டிப் பகுதியைச் சேர்ந்தவர் என விசாரணையில் தெரிய வந்துள்ளது. (ச-1)

## பூநகரி செல்லும் அரச ஊழியருக்கு இணைந்தபடி வழங்கப்படும்
### ஆளுநர் அறிவிப்பு

(திருகோணமலை)

யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களில் இருந்து துணுக்காய் பூநகரிக்கு கடமைகளுக்காக பஸ்களில் வரும் அரச ஊழியர்களுக்கு இணைந்த படி வழங்கப்படுமென வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது,துணுக்காய்,

பூநகரிப் பிரதேசங் களில் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டு பாட சாலை உட்பட அரச நிறுவனங்களின் பணிகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளது.அத்துடன் கிளிநொச்சி உட்பட பல பகுதி களில் அடுத்த மாத ஆரம்பத்தில் மக்கள் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர். எனவே துணுக்காய் பூநகரிப் பிரதேசங்களுக்கு கடமைக்காக வரும் அரச ஊழியர்களுக்கு போக்கு வரத்துக்காக இணைந்தபடி வழங்கப்படும். இணைந்தபடி வழங்குவதற்கு உரிய திணைக்களங்களில் ஊழியரின் வரவை உறுதிப்படுத்த வேண்டுமென ஆளுநர் குறிப்பிட்டார். (ச-3)


### எமது சைக்கிளை தந்துதவுக

கே.கே.எஸ்.வீதி,இல.பழை.49, புதிது 187,செல்சிற்றி போன் கடைக்கு முன்னால் 17.11.2009 அன்று காலை நிறுத்தப்பட்டிருந்த எமது லுமாலா பெண்கள்சைக்கிள்தவறுதலாக ஒருவரால் எடுத்து செல்லப்பட்டுள்ளது. அவரது லுமாலா பெண்கள் சைக்கிள் மேற்படி போன் கடையில் வேலை செய்யும் தனுசன் என்பவரிடம் உள்ளது.மாறி எடுத்தவர் எமது சைக்கிளை கொடுத்து விட்டு அவருடைய சைக்கிளை பெற்றுக்கொள்ளவும். (3967)

### தவறிவிட்டது

இல.521/10, பருத்தித்துறை வீதி, நல்லூர் எனும் முகவரியைச் சேர்ந்த கேதாரநாதன் சரவணன் என்பவரது தேசிய அடையாள அட்டை (910513320V) ஸ்ரான்லி வீதிக்கும் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்து டன் தொடர்பு கொள்ளவும்.

T.P:-0712827952

குறிப்பு:- 2010 ஆம் ஆண்டு G.C.E A/L பரீட்சைக்கு தோற்றவுள்ளார். (3971)

### முகவர்கள் தேவை

முதிரை மற்றும் தேக்கில் செய்யப்பட்ட கட்டில்கள், கதிரைகள், அலுமாரிகள் நிலைக் கண்ணாடிகள், கதவுகள், யன்னல்கள், சாப்பாட்டு மேசைகள் மற்றும் கதிரைகள் உட்பட சகல வீட்டுத்தளபாடப் பொருட்களை விற்பனை செய்வதற்கு யாழ். நகரில் முகவர்கள் தேவை.

தொடர்புகளுக்கு:-

நஜீவ்- 0718199490

0778693677,0776160942

(3974)

### 50 வருட பூர்த்தியை முன்னிட்டு
### மாபெரும் மலிவு விற்பனை

புத்தகங்களுக்கு 10%-40% வரையான விசேட விலைக்கழிவு




- பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரையான அனைத்து வகையான புத்தகங்களும் விசேட கழிவில்
- மருத்துவ மாணவர்களுக்குத் தேவையான நூல்கள் விசேட கழிவு விலையில்
- OVER HEAD PROJECTOR, OVER HEAD PROJECTOR SCREEN, LAMINATOR, BINDING MACHIN விசேட தள்ளுபடி விலைக்கு
- ஆய்வு கூட உபகரணங்கள், வைற்போட், மக்நெற் போட், கிறீன் போட் வகைகள் சிறப்பு விலையில்.
- மற்றும் ஏனைய ஸ்ரேசனரிப் பொருட்கள், பாடசாலை தர உள்ளீட்டுப் பொருட்கள் விசேட விலையில்

தாங்கள் தேவை எதுவானாலும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

1959 முதல்

கடந்து 50 வருடங்களாக ஆரம்பக் கல்வி முதல் பல்கலைக் கழகம் வரை கல்விக்கு வழிகாட்டி கல்வி வித்தகர்களை உருவாக்கிய ஒரே ஸ்தாபனம்

ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(C-3770)

# இன்று ஒரு தகவல்

## இரு படிப்பினைகள்

நண்பரொருவர் படித்துக் கொண்டிருந்தார்.

"என்ன புடிக்கிறீர்கள்" என்று கேட்டேன்.

"பகவத்கீதை படிக்கிறேன்" என்றார்.

''அதைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்'' என்றேன்.

"பகவத் கீதையில் இரண்டு முக்கியமான படிப்பினைகள் உண்டு. அதன் படி நடந்தால் நம் வாழ்க்கை வெற்றிகரமாக அமையும்" என்றார்.

"அது என்ன படிப்பினை? விபரமாகச் சொல்லுங்களேன்" என்றேன். அவர் விபரமாகச் சொன்னார்.

முதல் படிப்பினை–கீதையின் இரண்டாவது அத்தியாயத்தில் 48 ஆவது சுலோகத்தில் வரும்.

'சமத்வம் யோக உச்யதே' அதாவது யோகம் எனப்படுவது ஒரே சீரான நிலையில் இருப்பது.

நம் உடம்பைப் பொறுத்த வரைக்கும் இந்தச் சமத்துவம் என்பது இயற்கையாகவே அமைந்திருக்கிறது.

நாம் கடுமையான குளிரில் இருந்தாலும் சரி அல்லது கடுமையான வெயிலில் இருந்தாலும் சரி நமது உடல் வெப்பநிலை மாறுவதில்லை. ஒரே சீராகத்தான் இருக்கும். அப்படி இல்லையென்றால் உடம்பில் ஏதாவது கோளாறு என்று அர்த்தம்.

ஆக... நம் உடம்புக்குள் இருக்கும் ஏதோ ஒன்று வெப்பநிலையை சமத்துவமாக வைத்திருக்கிறது.

ஆனால் மனத்தைப் பொறுத்தவரைக்கும் இந்த சமத்துவம் நமக்கு இருப்பதில்லை.

இன்பம் வந்தால் துள்ளிக் குதிக்கிறோம். துன்பம் வந்தால் துவண்டு போகிறோம். இப்படி இருக்கக்கூடாது.

இரண்டு நிலைகளிலும் ஒரே மாதிரியாத்தான் இருக்க வேண்டும். அதுதான் யோகம் என்கிறது கீதை.

இரண்டாவது படிப்பினை என்னவென்றால் அதே இரண்டாம் அத்தியாயத்தின் 50 ஆவது சுலோகத்தில் வரும். 'யோக கர்மஸ் கௌசலம்'

அதாவது செய்வன திருந்தச் செய்தால் அது யோகம். நாம் பல சந்தர்ப்பங்களில் செய்வதைத் திருந்தச் செய்வதில்லை. அரைகுறையாகத்தான் செய்கிறோம்.

குறைவான ஊதியம் கிடைத்தால் அதற்கு தகுந்தாற்போல் ஒருவேலை. அதிக ஊதியம் கிடைத்தால் அதற்குத் தகுந்தாற்போல் ஒருவேலை செய்கிறோம்.

பல நேரங்களில் உழைப்புக்குத் தகுந்த ஊதியம் கிடைப்பதில்லை. ஊதியத்திற்குத் தகுந்த உழைப்பும் இருப்பதில்லை.

நிர்வாக ரீதியாக இதைச் சரிசெய்யலாம் அல்லது போராட்டங்கள் மூலமாகக் கூட இதைச் சரி செய்யலாம் இது ஒருபக்கம். ஆனாலும் அதற்காக செய்யும் காரியத்தை அரைகுறையாகச் செய்யக்கூடாது.

கிடைக்கிற பலனைப்பற்றிக் கவலைப்படாமல் எடுத்த காரியத்தைச் சிறப்பாக முடிக்க வேண்டும். அப்படி முடிப்பதற்குப் பழகிக் கொள்ள வேண்டும் அதுதான் யோகம்.

ஆக இரண்டும் கீதையின் முக்கியமான இரண்டு படிப்பினைகள் என்று சொல்லி முடித்தார் அந்த நண்பர்.

இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ளவேண்டியது என்னவென்றால்...

இன்பம் வந்தால் அதற்காகத் துள்ளிக் குதிக்காதே! துன்பம் வந்தால் அதற்காகத் துவண்டு போகாதே!

எப்பொழுதும் ஒரே மாதிரியாக இருக்கப் பழகிக்கொள்.

அதேபோல் எந்தக் காரியத்தில் ஈடுபட்டாலும் செய்வதைச் சிறப்பாக செய்யப் பழகிக்கொள். இப்படி நம்மை நாமே தயார் பண்ணிக் கொண்டால் நம்வாழ்க்கை வெற்றிகரமாக அமையும்.

இப்படியெல்லாம் நாம் நம்மைத் தயார் பண்ணிக் கொள்ளாததால் தான் நாம் பல சந்தர்ப்பங்களில் வாழ்க்கையில் சிரமப்படுகிறோம்.

சமையல் செய்தால் கூட அதைச் சிறப்பாக செய்பவர்கள் உண்டு. பலனை எதிர்பார்ப்பதில்லை. சாப்பிடுபவர்களும் அதை எதிர்பார்ப்பதில்லை.

ஒரு கணவன் தாமதமாக வீட்டுக்கு வந்து சேர்ந்தான். மனைவி மிகவும் வருத்தத்துடன்,

''ரொம்ப சாரிங்க. உங்களுக்காக ஆசையாக ஒரு புது அயிட்டம் பண்ணி வைச்சேன். அதை நம்ம நாய் சாப்பிட்டு விட்டது'' என்றார்.

உடனே அந்தக் கணவன்' ''அதற்காக கவலைப் படாதே! நாம் வேறொரு நாய் வாங்கிக் கொள்ளலாம்'' என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# அதிபர் சேவை நியமனங்களின் போது இனவிகிதாசார அடிப்படை பேணப்பட வேண்டும்

## ஆசிரியர் சங்கங்கள் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை அதிபர் சேவை 3I, 2II நியமனங்களின் போது இன விகிதாசாரம் பேணப்படாமை குறித்து ஆசிரியர் சங்கங்கள் போர்க் கொடி தூக்கியுள்ளன.

இலங்கை அதிபர் 2IIக்கு 229 புள்ளியையும் அதிபர் சேவை 3 க்கு 142 புள்ளியையும் பொது வெட்டுப் புள்ளியாக அறிவித்ததன் மூலம் 15/90 ஆம் இலக்க சுற்று நிருபத்தை கல்வியமைச்சு மீறியுள்ளதென ஆசிரியர் சங்கங்கள், கல்வி யமைச்சின் செயலாளருக்கு தமது ஆட்சேபங்களைத் தெரிவித்துள்ளன.

இலங்கை அதிபர் சேவை 2 II க்கு 2008.12.01 இல் அமுலாகும் வண்ணம் 15/90 அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் படி இன விகிதாசார அடிப்படையில் நியமனம் முன்னர் வழங்கப்பட்டது.

அதன்படி சிங்களவருக்கு 232, தமிழர், இஸ்லாமியருக்கு 228, இந்திய தமிழருக்கு 218, மலாயருக்கு 212, பறங்கியர்க்கு 277 என்ற வெட்டுப்புள்ளி முன்னர் அறிவிக்கப் பட்டே இந் நியமனம் மேற்கொள்ளப்பட்டது.

தற்போது அந் நடைமுறை முற்றாக நீக்கப்பட்டு 229 என்ற பொதுப் புள்ளியினடிப்படையிலே 1942 பேருக்கு நியமனம் புதிய திகதியான 13.11.2009 முதல் வழங்கப்பட்டுள்ளது.

விகிதாசார முறைமை திடீரென நீக்கப்பட்டது ஏன்? இது 15/90 இலக்க அரச சுற்றறிக்கையை மீறும் செயல் என ஆசிரிய சங்கங்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

இதனால் 26 சிறுபான்மையினர் பதவியையிழப்பதாகவும் மேலும் பலருக்கு கிடையாமலிருப்பதாகவும் கூறப்படுகிறது.

உச்ச நீதிமன்ற தீர்ப்பால் எழுத்துப் பரீட்சையில் 155 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள் மேன் முறையீடு செய்யலாம் என்ற நடைமுறையில் பலருக்கு அநீதி விளைவிக்கப் பட்டுள்ளது எனத் தெரிகிறது.

அதாவது மாகாண மட்டத்தில் காட்டப்படாத இலகுவான (பிரதி அதிபர், பிரிவுத் தலைவர், கடமை நிறைவேற்று அதிபர்) கடிதப் பிரதிகளை ஏதோ ஒரு வகையில் பெற்று தேசிய மட்டத்தில் காட்டி 30-50 வரையிலான புள்ளிகளை சிலர் பெற்றிருக்கின்றனர். இப்பிரதிகள் அன்று ஏன் காட்டப்படவில்லை?

அங்கிருந்த அதிகாரிகள் கேட்காமல் அதற்கான புள்ளிகளை வாரி வழங்கியுள்ளனர்.

இதனால் பரீட்சையில் 175 க்கு மேல் புள்ளி பெற்றவர்களும் நியமனத்தில் தவிர்க்கப்பட்டுள்ளனர்.

இது நியாயமாகுமா? நேர்முகப் பரீட்சையில் புதிதாகக் காட்டப்பட்ட ஆவணங்களுக்கு புள்ளி வழங்குகையில் அதிகாரிகள் அசமந்தப் போக்கைக் கடைப்பிடித்துள்ளனர்.

கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் கடமையாற்றியவர்கள் அதிபர் சேவைக்கு பொருத்தமானவர்கள் என்ற மனோ நிலைமையையும் இந் நியமனம் குறிகாட்டுகிறது. ஜனசவிய நியமனத்தை அனைவரும் அறிவோம்.


போட்டிப் பரீட்சையைப் பற்றி அலட்டிக் கொள்ளாத நிலையில் வழங்கப்பட்ட இந்நியமனத்தையிட்டு கல்வியமைச்சு சிந்திக்க வேண்டும். பொதுப் புள்ளி வழங்கியமையால் பாதிக்கப்படுவோர் மீண்டும் நீதிமன்றம் செல்ல திட்டமிட்டுள்ளனர்.

இது மேலும் இந்நியமனத்தை தாமதமாக்க வழிகோலும். எனவே 13 ஆம் திகதிக்குள் 7000 பதவியுயர்வுகளை வழங்கியதாகக் கூறும் அமைச்சு இது விடயத்தில் நீதியான போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும் என தொழிற்சங்கங்கள் கேட்டுக் கொண்டுள்ளன. (ஓ-6)

## பாடசாலை பணியாளர் பதவியுயர்வு

யாழ். மாவட்டத்தின் 5 கல்வி வலயங்களிலுமுள்ள பாடசாலைகளில் பணியாளர்களாகப் பணியாற்றும் 60 பணியாளர்களுக்கு 1-6-2009 முதல்பதவியுயர்வுழங்கப்பட்டுள்ளது.

இப் பதவியுயர்வுடன் காவலாளி வெற்றிடங்களும் நிரப்பப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் செயலாளர் இ. இளங்கோவன் அறிவித்துள்ளார். (ஓ)



தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கொடிகாமம் அல்லாரை நலன்புரி நிலையத்திலிருந்து பரீட்சைக்குத் தோற்றி கிளிநொச்சி மாவட்டத்தில் 5 ஆம் நிலையையும் 162 புள்ளிகளையும் பெற்ற ஜெயந்திரன் நிலவனுக்கு சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா பரிசில் வழங்கி கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.

## இராசி பலன்

24.11.2009

(கார்த்திகை 08 செவ்வாய்க்கிழமை)

சப்தமி முற்பகல் 11.48 மணிவரை

அவிட்டம் முன்னிரவு 9.24 மணிவரை

இராகுகாலம் 3.11 - 4.41 மணிவரை

சுபநேரம் 10.41 - 12.11 மணிவரை


| | |
|---|---|
| மேடம் | எடுத்த காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, போசன சுகம், புகழ். |
| இடபம் | தூர தேசச் செய்தி, தொழில் முன்னேற்றம், முயற்சி கைகூடும், தனலாபம். |
| மிதுனம் | சரீரப் பிரயாசை, எதிர்பாராத செலவு, புதியதிட்டமிடல், திடீர்பயணம். |
| கடகம் | மனக்கவலை, பிரயாண பயம், காரிய தாமதம், பணக்குறைவு. |
| சிங்கம் | பெருமையடைதல், மனோதைரியம், விருந்துபசாரம், எடுத்த காரியம் கைகூடும். |
| கன்னி | செய்தொழில் நன்மை, காரிய சித்தி, பெரியோர் உதவி, போசன சுகம். |
| துலாம் | அஜீரணக் கோளாறு, தாழ்ந்த சுபாவம், முயற்சிதாமதம், போசன சுகக்குறைவு. |
| விருச்சிகம் | உஷ்ண நிலை, தாய்வழி உறவு, சுபசெய்தி, மனச் சஞ்சலம். |
| தனுசு | பெருமையடைதல், வாகன சுகம், முயற்சி கைகூடும், உறவினர் வருகை. |
| மகரம் | உணர்ச்சி வசப்படல், தொழில் விருத்தி, தனவிரயம், போசன சுகக்குறைவு. |
| கும்பம் | புதிய முயற்சி, வெகுமானம், விருந்துபசாரம், நண்பர்கள் சந்திப்பு. |
| மீனம் | வீண் அலைச்சல், சுபசெலவு, சோம்பல் நிலை, குடும்பக்கவலை. |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 170 | 200 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 110 | 120 | 80 |
| தக்காளி | 70 | 100 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 80 | 100 | 100 |
| கரட் | 70 | 80 | 80 |
| பூசணி | 50 | 60 | 40 |
| புடோல் | 70 | 100 | 40 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 90 | 120 | 70 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 120 |
| பாகற்காய் | 100 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 30 | 40 | 30 |
| கரணைக் கிழங்கு | 40 | 50 | 40 |
| பயிற்றங்காய் | 100 | 120 | 70 |
| லீக்ஸ் | 110 | 140 | 160 |
| பீற்றூட் | 80 | 100 | 60 |
| கறிமிளகாய் | 100 | 140 | 160 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 120 |
| கீரை - 1 பிடி | 20 | 35 | 20 |
| தேசிக்காய் | 200 | 240 | 240 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 40 | 35 |








சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் தொழிற் பயிற்சிக் கண்காட்சி ஆனைக்கோட்டை தொழிற்பயிற்சி நிலையத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தொழிற்பயிற்சி பணிப்பாளர் என்.கோணேஸ்வரன் நாடாவெட்டி கண்காட்சியை ஆரம்பித்து வைப்பதையும், அருகில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் செல்வி வி.நிறஞ்சனா நிற்பதையும், விருந்தினர் கண்காட்சியைப் பார்வையிடுவதையும், அபிவிருத்தி உதவியாளர் மற்றும் போதனாசிரியர்களுடன் பயிற்சியைப் பூர்த்தி செய்த மாணவர்களையும் படங்களில் காணலாம்.

## வான்கோழிகள் விற்பனைக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் அச்சுவேலி பிராந்திய கால்நடைப்பண்ணையில் உள்ள வான் கோழிகள் கிலோ ஒன்று (உயிர்நிறை) ரூபா 400 விலையில் விற்பனைக்குள்ளன. எனவே வேண்டிய பண்ணையாளர்கள் கைத்தொழில் பேட்டை வீதி, அச்சுவேலியில் அமைந்துள்ள திணைக்களப் பண்ணையில் நேரடியாகவோ அல்லது 0213211366 இலக்க தொலைபேசி மூலம் உடனடியாகவே தொடர்பு கொண்டு வேண்டிய வான் கோழிகளை பெற்றுக் கொள்ளுமாறு கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப்பணிப்பாளர் திருமதி வ.அமிர்தலிங்கம் கேட்டுக்கொள்கின்றார். (ஓ)

## புதிய தொழிற் பயிற்சிகளுக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையினால், இலங்கை அரசினாலும், சர்வதேச ரீதியிலும் அங்கீகரிக்கப்பட்ட தேசிய தொழிற்றிறன் சான்றிதழுக்கான (NVQ) ஆறு மாதத்துக்கான புதிய கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இவ் வகையில் கணனிப்பிரயோக உதவியாளர், கணனி வன்பொருள், வீட்டு மின் வினைஞர், கட்டட நிர்மாணம், மரப் பொறியியல், அலுமினிய கட்டுமானம், மோட்டார் சைக்கிள் பொறிவலர், ஆடை வடிவமைப்பு (பெண்கள், சிறுவர்), வெல்டிங், கட்டட மேற்பார்வையாளர்(1வருடம்), நீர்க்குழாய் பொருத்துதல் ஆகிய கற்கைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிக்க விரும்புவோர் சுய விபரப்படிவத்தினை மாவட்ட இணைப்பாளர், இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை, இல.375, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு டிசம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்குமாறும் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் கற்கை நெறியைக் குறிப்பிடுமாறும் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையினர் மாவட்ட இணைப்பாளர் இரா.அகிலன் அறிவித்துள்ளார். (ஓ)

## முறைசாராக் கல்வி நிலையத்தின் தகவல் சேகரித்தல் தொடர்பான செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

முறைசாராக் கல்வி நிலையத்தின் தகவல் சேகரித்தல் தொடர்பான செயலமர்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 8 மணி முதல் 4.15 மணிவரை இசுறுபாய பத்திரமுல்லை கல்வி கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வில் வலய முறைசாராக் கல்வி நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர்கள், கோட்டக்கல்வி அதிகாரி, திட்ட உதவி அதிகாரி, முறைசாராக் கல்வி ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோர் கலந்துகொள்ளுமாறு கேட்கப்படுகிறது.

மேலும் இச் செயலமர்வில் உரிய அறிவித்தல்கள் வழங்கப்படுவதோடு தொகை மதிப்புக்கு தேவையான படிவங்கள் கோட்ட மட்டத்தில் வழங்கப்படவுள்ளது. எனவே மேற் குறிப்பிட்டவர்களை தவறாது கலந்துகொள்ளும்படி வட மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர் பி.செல்வின் இதயநியஸ் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் தொலைநகல் மூலம் அறிவித்துள்ளார். (ஓ-9-19)

## போதனாசிரியர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை தமிழ் மொழிமூல போதனாசிரியர்களுக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

மரப்பொறியியல், வீட்டு மின்னிணைப்பு, கட்டட நிர்மாணம், நீர்க்குழாய் பொருத்துதல், காய்ச்சி இணைத்தல், கணனிப் பிரயோகம், கணனி வன்பொருள், கணனி வரைபட வடிவமைப்பாளர், படவரையுனர், முச்சக்கர வண்டிதிருத்துனர், தோற்பொருள் உற்பத்தி, சமையற்கலை, வெதுப்பக உற்பத்தி ஆபரண உற்பத்தி, ஆபரணக்கல் வெட்டுனர், தையல் (பெண்கள் ,சிறுவர்கள்) , தையல் (ஆண்), குளிரூட்டலும் வளிசீராக்கலும், மின் கம்பி முறுக்குனர், தன்னியக்க வாகனப் பொறிவலர், வெளியிணைப்பு இயந்திரம் திருத்துனர், அலுமினியக் கட்டுமானம், ஒப்பனையாளர், விவசாய உபகரணங்கள் திருத்துனர், கணிய அளவையியல் முதலிய கற்கை நெறிகளுக்கு பொருத்தமான போதனாசிரியர்களை விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே விண்ணப்பித்தவர்களும் புதிதாக விண்ணப்பிக்க விரும்புவர்களும் சுயவிபரத்தை, மாவட்ட இணைப்பாளர், இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை, இல.375, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறும் விண்ணப்பத்தின் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் துறையைக் குறிப்பிடுமாறும் ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட துறைகளுக்கு விண்ணப்பிக்க முடியும் என்றும் அதிகார சபையின் மாவட்ட இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ)

## அதிபர்களுக்கான கூட்டம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் க.பொ.த (சா/த) பரீட்சை 2009 இன் இறுதியில் புள்ளிப்பட்டியல் விநியோகம் செய்வது தொடர்பான அதிபர்களுக்கான கூட்டம் இன்று நண்பகல் 12 மணிக்கு தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே க.பொ.த (சா/த) பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் உள்ள பாடசாலை அதிபர்கள் மட்டும் தவறாது கலந்துகொள்ளுமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் தெரிவித்துள்ளார். (ஓ-9-29)

## மீள்குடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

மிருசுவில் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச மக்கள் விரைவில் மீளக் குடியமர்த்தப்படவுள்ளனர்.

இதில் மருதங்கேணிப் பிரதேசத்தைச் சேர்ந்த 136 குடும்பங்களைச் சேர்ந்த 434 பேர் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-9)




## வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)


யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள நல்லூர், கொழும்புத்துறை, அரியாலை ஆகிய பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி A.R.V கட்டம் கட்டமாக ஏற்றப்படவுள்ளது.


இதனடிப்படையில் நாளை புதன்கிழமை பின்வரும் இடங்களில் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. காலை 9 மணிமுதல் 11 மணிவரையும் நல்லூர் பொது சுகாதாரப் பிரிவுக்குட்பட்ட மணல்தறை ஒழுங்கையிலும் முற்பகல் 11.30 இதிலிருந்து 1.30 மணிவரையும் சிவன் கோவில் வீதியிலும் வைத்து ஏற்றப்படவுள் ளது.


அத்துடன் கொழும்புத்துறை பொதுச் சுகாதாரப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் காலை 9 மணிமுதல் 11 மணிவரையும் கொழும்புத்துறை இலந்தைக்குளம் வீதியிலும் நண்பகல் 11.30 இதிலிருந்து 1.30 மணிவரையும் விபுலானந்தர் வீதியிலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

இதேவேளை அரியாலை பொதுச் சுகாதாரப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை வைரவர் கோவில் வீதி, அருணோதயா சனசமூக நிலையத்திலும் நண்பகல் 11.30 இதிலிருந்து 1.30 மணிவரையும் கண்டிவீதி தியாகராஜா படிப்பகத்திலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

எனவே இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு இத் தடுப்பூசியினை ஏற்றிக்கொள்ளுமாறு யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ-9)





பரமேஸ்வராக் கல்லூரியின் ஸ்தாபகர் சேர். பொன் இராமநாதனின் குருபூசைத்தினம் யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்றது. நிக்ழ்வில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் என்.சண்முகலிங்கன் பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள சேர்.பொன்.இராமநாதனின் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவிப்பதையும், பல்கலைக்கழக நூலகக்கேட்போர்கூடத்தில் நடைபெற்ற இராமநாதன் நினைவு ஆய்வுரை நிகழ்வில் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் அறிமுகவுரை நிகழ்த்துவதையும், பேராசிரியர் அ.சத்தியசீலன் ஆய்வுரை வழங்குவதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:- அலுவலக செய்தியாளர்)

# நாடும் மக்களும்

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடந்த ஆய்வரங்கச் சிறப்புரைகள் - 2009

கலாநிதி
தெ.வே.மகாலிங்கம்

60

அதன்படி கோனேட்டி அய்யனுடைய காலத்தில் அடமானத்திலிருந்து மீட்கப் பெற்ற தேவதான, பிரம்மதேய , இறையிலி நிலங்களை எக்காரணத்தைக் கொண்டும் மீண்டும் அடமானம் வைக்கக்கூடாதென தீர்மானம் செய்தனர். இந்தச் சட்டங்களால் கோயிலுக்குரிய நிலங்களை அடமானமாகப் பெற்றவர்கள் இலாபம் அடைவதற்கும் , கோயில் கள் அவற்றை இழப்பதற்கும் உரிய வாய்ப்புகள் குறைவுற்றன.

தேவலாயங்களில் நித்திய நைவேத்தியங் களுக்கு வேண்டிய குடம் , தேங்காய் , அரிசி , மஞ்சள் , சாம்பிராணி , புஷ்பம் ,சந் தனம் , வாழையிலை , நெய் , உப்பு ,மிளகு , எண் ணெய் ,கடுகு , வெல்லம் , சர்க்கரை , வாழைப்பழம் , தயிர் முதலிய பொருள்களை வாங்குவதற்கு கோவில் நிலங்களிலிருந்து வந்த வருமானம் உதவியாக இருந்தது.

தேவாலயங்களின் கருவூலத்திலிருந்து மக்களுடைய தேவையை உணர்ந்து கடன் கள் கொடுக்கப் பெற்றன. கி.பி 1372 இல் இராமநாத தேவாலயத்தின் கருவூலத்தில் இருந்து அக் கோவிலின் நிலங்களைப்பயிரிட்ட குடியானவர்களுக்கு அக் கோவிலின் ஸ்தா னிகர்கள் 150 பொன் கடன் கொடுத்ததாக அறிகிறோம். இவ்விதம் கொடுக்கப்பெற்ற கடனைத் திருப்பித் தரமுடியாதவர்கள் தங்கள் நிலங்களை கோவில்களுக்கு விற்று விடுவதும் உண்டு. புதுக்கோட்டையைச் சேர்ந்த செவ்வலூர் என்ற கிராமத்தில் உள்ள திருப்பூமீஸ்வரம் உடைய நாயனார் கோவில் அதிகாரிகள் தேனூர் வடப்பற்று கிராம்த் தாருக்குக் காணிக்கை என்னும் வரி செலுத் துவதற்காக 300 சக்கரப் பணம் கடன் கொடுத்திருந்தனர். அக் கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாதவர்கள் தங்களுடைய நிலங்களை கோவில் அதிகாரிகளிடம் விற்றுவிட்டனர். திருவரன்குளம் என்னும் கிரா மத்து மக்களும் , பாடகாவல் அதிகாரிகளும் , நரசநாயக்கர் காலத்தில் , சில கடன்களைக் கொடுப்பதற்கு அக் கோவில் அதிகாரிகளிட மிருந்து கடன்களை வாங்கியிருந்தனர். அக் கடன்களைக் கொடுப்பதற்கு அக் கோவில் அதிகாரிகளிடமிருந்து கடன்களை வாங் கியிருந்தனர். அக்கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் திருவரன் குளத்து கோவிலார்க் குத் தங்கள் நிலங்களை விற்றனர்.

விஜயநகர ஆட்சிக்காலத்தில் தேவாலயங் கள் பலருக்கு வேலை வாய்ப்புக்களை அளித்தன. பிதுரூர் கோவிலின் ஊழியர் பலருக்கு ஓய்வு ஊதியங்களும் மற்ற சலுகை களும் கொடுக்கப் பெற்றதாக அப்துர் ரசாக் கூறியுள்ளார். தானத்தார் என்ற கோவில் அதிகாரிகள், கோவில்களுக்குரிய நிலங் களைப் பராமரித்து , அலுவலாளர்களை மேற் பார்வை செய்துகோவில்களை சிறந்த முறையில் பாதுகாத்தனர். கோவில் கேள்வி , கோவில் கணக்கு , மெய்க்காவல் , அறை காவல், பொற்பண்டாரம் , திருவிளக்குக் குடி மாகேஸ்வரரர்கள் என்பவர்கள் முக்கிய கோவில் அதிகாரிகளாவர். மேளக்காரர்கள் , இசை பாடுவோர் , சங்கு முழங்குவோர் , குடை பிடிப்போர் , நந்தவனம் பாதுகாப்போர் முதலி யோர் மற்ற கோயில் தொழிலாளர்கள் ஆவர். காலையிலும், மாலையிலும் வழிபாடுகள் நடக்கும் பொழுது இசை பாடுவதற்கும் , நாட்டி யம் ஆடுவதற்கும் பல இசையாசிரியர்களும் நாட்டிய மாதர்களும் இருந்த்னர்.

திருமுற்றம் கோயிலில் பன்னிரெண்டு இசையாசிரியர்களும்,360 கோவில் ஊழி யர்களும் இருந்ததாக ஓர் கல்வெட்டுக் கூறு கிறது.வேத பாராயணத்திற்கும், இதிகாச புராணங்களை விரித்துரைப்பதற்கும் கல்வி யில் வல்லவர்கள் நியமனம் செய்யப் பெற்ற னர். சில கோவில்களில் மருத்துவ உதவியும் வழங்கப் பெற்றது.மேற்கூறப் பெற்ற அலு வல்கள் , பரம்பரை உரிமையுள்ளவை. நியம னங்கள் செய்வதில் ஏதாவது தகராறு நடந் தால் கோவில் சபைகள் நியமனம் வழங்கின.

சோழர்காலத்தில் கல்வெட்டொன்று , கோவில் வேலைகளுக்கு எவ்விதம் நியமனங்கள் செய்யப் பெற்றன வென்று தெளிவாகக் கூறுகிறது. தேவார திருப்பதிகங்களை பாடுபடுபவர்கள் வேலையில் காலி ஏற்பட்டால் , முன் னர் அவ்வேலை செய்தவர்களின் நெருங்கிய உறவினர்கள் அவர்களுக்குரிய , ஊதியத் தைப் பெற்றுக்கொண்டு திருப்பதிகங்களைப் பாடவேண்டும். அவ்வாறு நெருங்கிய உறவி னர்கள் இல்லாமற் போனால் தகுதி வாய்ந்த மற்றவர்களுக்கு திருப்பதிகங்களைப் பாடும் அலுவல் அளிக்கப் பெறுதல் வேண்டும். மேற் கூறப்பெற்ற அலுவலாளர்களுக்கும் ,தொழிலா ளர்களுக்கும் நிலமானியங்கள் அளிக்கப் பெற்றன. சிலர் கோவில் பிரசாதங்களில் ஒரு பகுதியை ஊதியமாகப் பெற்றனர். நிலமானியம் பெற்றவர்கள் நிலங்களிலிருந்து பயனை அடையலாமே தவிர அவற்றை அடமானம் , கிரயம், தானம் முதலியன செய்யமுடியாது. திருப்புட்குழி கோவில் கல்வெட்டொன்றில் கோவில்களுக்குச் சேவை செய்வதற்கென மானியமாகக் கொடுக்கப் பெற்ற நிலங்களை அடமானம் வைப்போரும் , கிரயம் செய்வோ ரும் – வாங்குவோரும் கோவில் அதிகாரிகளால் அபராதங்கள் விதிக்கப்பெறுவர் எனக் கூறப் பெற்றுள்ளது. அவர்கள்,தெய்வ, அரச , சமூக துரோகிகளாகவும் கருதப்பெறுவர். திருப்புடை மருதூர் தேவாலயத்தில் இராமநாதன் என்பவர் தேவாலய கவியரசாக நிய மனம் பெற்ற, நிலமானியமும் வாடகை யில்லா வீடும் அளிக்கப் பெற்றார்.

நெசவுத் தொழிலாளர்களாகிய கைக்கோ ளர்களுக்கு தேவாலயங்கள் பல வழிகளில் உதவி செய்தன. செங்கற்பட்டு ஜில்லா பெரு நகர் கிராமத்தில் வெகு நாட்களாக நெசவுத் தொழிலாளர்களுக்கு குடியிருப்பு வசதியில் லாதிருந்தது. அவ்வூர்க் கோவிலின் திருமட விளாகத்தில் சம்புவராயர்கள் காலமுதல் உப யோகப்படாமல் இருந்த இடங்களில் இருபது வீடுகள் அமைப்பதற்கு வசதியாக நிலங்களை விற்ற, கோவில் திருமதிலைச் சீர்ப்படுத்து வதற்கும் சில அணிகலன்களைச் செய்வதற் கும் செலவழிக்கப்பட்டது. (குடியிருப்பு இடங்க ளுக்குரிய சில வரிகளைக் கொடுக்க முடியாத நெசவாளர்களுக்கு அவ் வரிகளை குறைக்க நிர்வாகத்தினருக்கு அதிகாரம் இருந்தது) மானாம்பதி கிராமத்தில் வானவ சுந்தர நாய னார் கோவிலுக்குரிய இடங்களில் வாடகை சீட்டுஎழுதிக்கொடுத்து விட்டு வீடுகளை அமைத் துக்கொள்ளுவதற்கு சில கைக்கோளர்க ளுக்கு அனுமதி கொடுக்கப் பெற்றது. கோவில் கள் அறச்சாலைகளாகவும் விளங்கி ஏழை எளியவர்களுக்கு அன்னதானமும் செய்தன. இதுகாறும் கூறப்பெற்ற செய்திகளால் விஜய நகர ஆட்சியில் மக்களுடைய வாழ்வில் கோவில்கள் எவ்விதம் பங்குகொண்டன என் பதை நாம் அறிந்துகொள்ளலாம். (தொடரும்)

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற
''விஜயநகரப் பேரரசும் கலாசார மறுமலர்ச்சியும்'' எனும்
ஆய்வரங்கில் மங்கள முருகேசன் வழங்கிய
''விஜயநகரப் பேரரசுக் காலச் சமுதாயமும் பண்பாடும்''
ஆய்வுக் கட்டுரை நாளை முதல் வெளிவரும்.

## முகாம்களிலிருந்து வெளிச்செல்பவர்களுக்கான புதிய நடைமுறை பின்பற்றப்படும்

### அமைச்சர் மஹிந்த சமரசிங்க விளக்கம்

(கொழும்பு)

நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள மக்கள் அனைவருக்கும் அடையாள அட்டைகள்வழங் கப்பட்டுள்ளன. அந்த வகையில் அம் மக்க ளுக்கு நடமாடும் சுதந்திரத்தை வழங் கும் விடயத்தில் ஒரு நடைமுறை பின்பற்றப் படும் என்று மனித உரிமைகள் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.யாருமே எதிர்பார்க்காத வகை யில் மக்களை மீள்குடியேற்றும் வேலைத் திட்டம் துரிதப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

டிசம்பர் மாதம் முதலாம் திகதிமுதல் இடம் பெயர்ந்த மக்களுக்கு நடமாடும் சுதந்திரம் வழங்கப்படவுள்ளமை குறித்து கருத்து வெளி யிடுகையிலேயே அமைச்சர் இந்த விடயத் தைக் குறிப்பிட்டார். அவர் இதுதொடர்பில் மேலும்கூறியதாவது,

இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு டிசம்பர் மாதம் முதலாம் திகதி முதல் நடமாடும் சுதந் திரத்தை வழங்குதவற்கு அரசாங்கம் தீர்மானித் துள்ளது. இதற்கான நடைமுறை ஒன்று தற் போது தயாரிக்கப்பட்டு வருகின்றது. நிவார ணக் கிராமங்களில் விசேட அலுவலகம் ஒன்று அமைக்கப்பட்டு அந்த அலுவலகம் ஊடாக வெளிச் செல்பவர்கள் பதிவுசெய்யப்படு வார்கள். மேலும் அனைவருக்கும் அடையாள அட்டைகள் வழங்கியுள்ளோம்.மேலும் ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட சர்வதேச சமூகம் இது வரை காலமும் நடமாடும் சுதந்திரம் குறித்த விடயத்தையே வலியுறுத்தி வந்தது. அதற் கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் உரிய ஏற்பாடுகளைச் செய்த பின்னர் அதுகுறித்து ஆராய்வோம் என்றும் கூறினோம்.மேலும் இடம்பெயர்ந்த மக்களை நாங்கள் சிறைப்படுத்தவில்லை. பாதுகாப்புக் கருதி தற்காலிகமாக தங்க வைத்துள்ளோம் என்பதனை சர்வதேசத்திற்கு நிரூபித்துள் ளோம். தற்போது ஏற்பட்ட சூழலின் அடிப் படையில் அம்மக்களுக்கு நடமாடும் சுதந்திரத் தை வழங்கத் தீர்மானித்துள்ளோம். எமது நடவடிக்கைக்கு ஐக்கிய நாடுகள்சபை வரவேற்பு தெரிவித்துள்ளது. மேலும் இடம்பெயர்வுக் குள்ளான மக்களை வேகமாக மீள்குடி யேற்றப்பட்டு வருகின்றனர்.

இந்தளவு வேகமாக அந்த மக்களை மீள்குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை என் றார். (ஓ-6)

## இலவச கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை உறுப்பினர் முருகையா கோமகனின் ஒழுங்குபடுத்தலில் எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த.(சா/த) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தின் முன்னணி ஆசிரி யர்கள் கலந்துகொள்ளும் இக் கருத்தரங்கு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு கொட்டடி நமசிவாய வித்தியாசாலையிலும் நாளை புதன்கிழமை காலை 9மணிக்கு நாவாந்துறை றோ.க.வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளது. எனவே பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தவறாது கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள் ளப்படுகிறது. (ஓ-9)

## மீளக்குடியமர்ந்தவர்களுக்கு நிரந்தர வசிப்பிட வசதி செய்து தரப்படவேண்டுமென கோரிக்கை

இலங்கையில் கடந்த மே மாதம் வரை யில் பல வருடங்களாகப் போர்ப்பிரதேசமாகத் திகழ்ந்த முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் இடம்பெயர்ந்த மக்களை துரித மீள்குடியேற்ற நடவடிக்கையின் கீழ் ஆயிரக்கணக்கானவர்கள் இதுவரையில் மீளக்குடியமர்த்தப்பட்டிருக்கின்றார்கள்.

இவ்வாறு மீளக்குடியமர்ந்துள்ள மக்க ளுக்கான போக்குவரத்து உட்பட அடிப்படைத் தேவைகளை அரசாங்கம் செய்துள்ளதாக அங்கு சென்றுள்ள மக்கள் தெரிவிக்கின்றார் கள். இருப்பினும் அநேகமானவர்கள் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள கூரைத் தகடுகளைப் பயன்படுத்தி தற்காலிகக் கொட் டில்களை அமைத்து அவர்களுக்குக் கொடுக் கப்பட்டுள்ள கூரை விரிப்புகளை நிலத்தில் விரித்துஅதில் வசித்து வருவதாகவும், வீட்டுத் திட்டத்தின் மூலம் வீடுகளை அமைப்பதற்கு வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என அவர் கள் கூறுகின்றார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய், கிளிநொச்சி மாவட்டம், முழங்காவில் ஆகிய பகுதிகளுக்கும் வவுனியாவுக்கும் இடையே பேருந்து சேவை ஆரம்பிக்கப்பட்டிருக் கின்றன. இதனைப் பயன்படுத்தி அந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் வவுனியா நக ருக்கு தினசரி வந்து செல்கின்றார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-6)



தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினால் பயன்தரும் மரங்களை கிராம மட்டத்தில் நடுகை செய்யும் நிகழ்வில் கழகத் தலைவர் லயன் ஆர்.கந்தையா மரத்தை நடுகைசெய்து நிகழ்வை ஆரம்பித்து வைப்பதை படத்தில் காணலாம்.

# பிறந்த எண் பலன்களும் அதிர்ஷ்ட பெயர்களும்

## உடல் எண் : 2 விதி எண் : 7

### உடலமைப்பு

பிறந்த எண் 2, விதி எண் 7 ஆகக் கொண்டு பிறந்தவர் சந்திரன், கேது இருவரின் ஆதிக்கத்திற்குட்பட்டவர்கள். இவர்கள் சற்று உயரமாகவும், சிறிது சதைப் பற்றுடனும் இருப்பர். மாநிறமானவர்.

### மன, குணவியல்பு

இவர்கள் நேர்மையானவர்களாக இருப்பர். மனத் தூய்மையுடன் கடவுள் பக்தியும் கொண்டவர்கள். எப்போதும் நல்லதையே எண்ணும் சுபாவமுடையவர். அதைப் போன்று தூய்மையான ஆடையுடன் காட்சி தருவர்.

தம்மைப் போல பிறரும் தூய்மையாகவும், நல்ல நெறிகளுடனும் இருக்க வேண்டுமென்ற துடிப்பு மிக்கவர். உபதேசம் செய்யவும் செல்வர்.

எந்த வித்தியாசமும் பாராட்டமாட்டார்கள். அனைவரிடமும் சமமாக ஏற்றத் தாழ்வின்றிப் பழகக் கூடியவர்கள். பிறர் யாரேனும் கஷ்டப்படுவதைக் கண்டால் கொஞ்சமும் மனம் பொறுக்கமாட்டார்கள். வலியச் சென்று உதவி செய்யும் நல்ல மனம் இவர்களிடம் இயற்கையாகவே இருக்கும்.

இவர்களுக்கு தோல்வி ஏற்படுவது அரிது. அப்படி ஏற்பட்டுவிட்டால் துவண்டுவிடுவர். தோல்வியைத் தாங்கும் மனப்பக்குவம் இவர்களிடம் இருப்பதில்லை. இவர்களுக்கு சிறு பிரச்சினை ஏற்பட்டாலும் போதும், பெரும் குழுப்பத்துக்கு ஆளாகிவிடுவர். அதனால் தன் வாழ்க்கையே அஸ்தமித்துவிட்டது போல் வேதனைக்குள்ளவாார்.

இவர்கள் பிறருடன் அதிகம் பழகமாட்டார்கள். பிறரோடு இணைந்து போகும் போக்கு குறைந்தே காணப்படும். இவர்களுக்கு கோபம் வராது. வந்து விட்டால் காரசாரமாகப் பேசுவர்.

துணிச்சல் மிக்கவராகவும் இருப்பவர். இத்தகையவர் தனக்குத் தெரிந்த ஏதேனும் ஒருபாட்டை எப்போது முணுமுணுத்துக் கொண்டே இருப்பர்.

### குடும்ப வாழ்க்கை

இவர்களுக்கு வாய்க்கும் துணைவர் நல்லவராகவும், அன்புள்ளம் கொண்டவராகவும் இருப்பர். நிர்வாகத் திறமையுள்ளவர். குடும்ப மேன்மைக்கு பாடுபடுபவராக இருப்பர்.

அதனால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிம்மதி இருக்கும். அதனால் ஜாதகர் வேண்டாத சிறு பிரச்சினைக்கும் பெருமளவு வேதனைப் படுவர்.

### தொழிலும் வருமானமும்

இவர்கள் கலாரசிகர்களாகவும், கலைத் தொடர்பில் ஈடுபாடு கொண்டவர்களாகவும் எழுத்தாற்றலும் பெற்றிருப்பர். இரசாயனத் தொடர்புடைய தொழில்களில் சிறப்புப் பெற்றிருப்பர். நூலுக்கும் துணிகளுக்கு சாயம் தோய்த்தல் போன்ற தொழில்களில் மேன்மையுறுவர்.

இவர்களுக்கு தொழிலில் இலாபமும் பொருள் சேர்க்கையும் உண்டாகும். வாழ்க்கையில் உன்னத நிலை அடைவர்.

### ஆரோக்கிய நிலை

இவர்களுக்கு வாயுத் தொல்லையும், இரத்தக் கொதிப்பு, மாரடைப்பு போன்றனவும் ஏற்படும். மூட்டுகளில் வலியும், வீக்கமும் ஏற்பட்டு தொல்லை கொடுக்கும். மனபீதி காரணமாக உடல் நலனில் பாதிப்பு ஏற்படும்.

### சாதக, பாதக எண்களும், திகதியும்

இவர்கள் சுக்கிரன் ஆதிக்கத்திற்குட்பட்ட 6 ஆம் அது தொடர்புடைய விஸ்தார எண்களின் அதிர்ஷ்டப் பலன் அளிக்கவல்ல பெயருக்கு மாற்றிக் கொள்ளலாம். கேதுவின் ஆதிக்கம் பெற்ற 7 இல் கூட யோகப்பலன் அளிக்கும். கூட்டுஎண்ணுக்குபெயரைமாற்றிக்கொள்ள நன்மை தரும். தம் நிறுவனங்களுக்கும் 6 தொடர்புடைய எண்களே சிறந்தவை.

6,7 யோகமான எண்களாகும். அது தொடர்புடைய திகதிகள் கூட யோகமானவை.

ஆனால் செவ்வாயின் ஆதிக்கத்திற்குட்பட்ட 9 ஆம் அது தொடர்புடைய எண்களும், திகதிகளும் விலக்கத்தக்கவை, யோகமில்லாதவை.

## உடல் எண் : 2 விதி எண் : 8

### உடலமைப்பு

பிறந்த எண் 2 விதி எண் 8 ஆகப் பிறந்தவர்கள் சந்திரன் சனியின் ஆதிக்கத்திற்குட்பட்டவர்கள். உயரமானவர்களாகவும், உடல் வலிமை கொண்டவர்களாகவும் இருப்பர். இவர்களின் தோற்றம் பிறரைக் கவரும்படி இருக்கும்.

### மன, குணவியல்பு

இவர்களுக்கு உடல் வலிமை இருப்பது போன்று மனவலிமை இருப்பதில்லை. சிறு விடயத்திற்குக்கூட பெருமளவு பயந்துவிடுவர். கனவு கண்டாலே போதும். கலக்கத்துக்கும் ஆளாவர். பில்லி, சூனியம், பேய், பிசாசு என்றெல்லாம் அர்த்தமற்ற பயம் இவர்கள் மனத்தில் குடி கொண்டிருக்கும்.

இவர்களிடம் பிடிவாத குணம் இயற்கையிலேயே காணப்படும். தன் எண்ணத்தை மாற்றிக் கொள்ளமாட்டார்கள்.

பிறரிடம் அன்பாகப் பழகுவர். என்றாலும் யாரையும் நம்பமாட்டார்கள். ஒருவரிடமும் எந்த வேலையையும் மனப்பூர்வமாக ஒப்படைக்க மாட்டார்கள். சந்தேகப் பேர்வழிகளாக இருப்பர். மனம் கடல் அலை போன்று காணப்படும்.

இவர்கள் சாந்த குணமுள்ளவர்களாகக் காணப்பட்டாலும் சட்டென்று அதிகக் கோபத்துக்கு ஆளாவர். இவர்களுக்கு ஞாபக சக்தி கொஞ்சம் குறைவாக இருக்கும்.

இவர்களுக்கு சரி என்று பட்டால் கெட்டதைக் கூட நல்லது என்று கூறி வாதாடுவர். பிறர் சொல்வதையும் ஏற்கமாட்டார்கள். இருந்தாலும் தம்மைவிட மூத்தவர்களிடம் மதிப்பும், மரியாதையும் கொண்டிருப்பர்.

இவர்களுக்கு சிறு சந்தேகம் குழப்பம் வந்து விட்டால் எல்லாமே பாழாகிவிடும். தனக்குத் தானே திட்டமிடும்போக்கு இவர்களிடம் அதிகம் காணப்படும்.

### குடும்ப வாழ்க்கை

இவர்களின் குடும்ப வாழ்க்கை ஏற்றத் தாழ்வுடன் காணப்படும். கையில் பணமிருந்தால் சந்தோஷமாக அதிகம் செலவு செய்வர். பணம் இல்லாது போய் விட்டால் குடும்பத்தினரிடம் எரிந்து விழுவர். இது போன்ற இவருடைய போக்கு, பிறருக்கு எரிச்சலை ஊட்டுவதாக இருக்கும். அதனால் குடும்பத்தில் இவர்கள் திருப்தி பெறுவது கடினம்.

### தொழிலும் வருமானமும்

இவர்கள் கலையார்வம் மிக்கவர்கள். அது தொடர்பான தொழில்களில் ஈடுபடுவர். பொறியியல் துறையிலும் வெளிநாடுகளுடன் தொடர்பு கொண்ட வியாபாரத்திலும் ஈடுபாடு கொண்டிருப்பர். இவர்களுக்கு ஆடம்பரப் பொருள் சம்பந்தமான எல்லாவகைத் தொழில்களும் ஏற்றவை. வண்டி வாகனங்களால் கூட இவர்கள் இலாபம் பெறுவர்.

### ஆரோக்கிய நிலை

இவர்கள் அடிக்கடி மனக் குழப்பத்துக்கு ஆளாவர். அதனால் தலைவலி ஏற்படும். அதைத் தவிர இடுப்பு வலி, முதுகுவலியும் ஏற்பட வாய்ப்பு உள்ளது. ஜீரண மண்டல நோய்களும் ஏற்படும். இவர்கள் அதிகமாக உடலுறவு கொள்ள நேர்வதால் அது சம்பந்தமான தளர்ச்சி நோய்க்கு ஆளாகக்கூடும்.

### சாதக, பாதக எண்களும், திகதியும்

இவர்களுக்கு சுக்கிரன், புதன் ஆதிக்கத்திற்குட்பட்ட 6, 5 ஆகிய எண்களில் யோகமான பலன் அளிக்கும் எண்ணுக்கு பெயரை மாற்றிக் கொள்வது நல்லது.

தம் நிறுவனங்களுக்கும் இது போன்ற எண்களில் பெயர் அமைத்துக் கொள்ளலாம்.

இவர்களுக்கு 5,6,7 ஆகியவை யோகமான எண்களும், அது தொடர்பான திகதிகளும் யோகமளிப்பவையாகும்.

ஆனால் செவ்வாய் ஆதிக்கம் பெற்ற 9 ஆம் அது தொடர்புடைய எண்களும் திகதிகளும் யோகமற்றவை.

(தொடரும்)

---

# இராணுவத்தை வழிநடத்தியவரால் எவ்வாறு ஜனநாயக ரீதியில் நாட்டை வழிநடத்த முடியும்

## வாசுதேவ நாணயக்கார கேள்வி

(கொழும்பு)

கட்டளைகளை பிறப்பித்து இராணுவத்தினரை வழிநடத்திய ஜெனரல் சரத் பொன்சேகாவால் நாட்டை வழிநடத்த முடியாது. அதற்கு அரசியல் அடித்தளம் இருக்க வேண்டும் என்று ஜனாதிபதியின் ஆலோசகரும் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு தேர்தலில் எதுவிதமான சவாலும் இல்லை. மிக இலகுவாக வெற்றி கொள்வாரென்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

இது தொடர்பாக வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி தேர்தலாகட்டும் பொதுத் தேர்தலாகட்டும் அதில் இந்நாட்டு மக்கள் எவரும் போட்டியிடலாம். ஆனால் அதற்கு அரசியல் அடித்தளம், அனுபவம், பொறுமை அனைத்தும் இருக்க வேண்டும்.

ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு இது போன்ற எந்தவொரு கோட்பாடும் கிடையாது. வழிநடத்தியவர் இவர். கட்டளைகள் மதிக்கப் படாவிட்டால் ''தோட்டாவினால்'' பதிலளித்தவர். இவ்வாறான ஒருவரால் எவ்வாறு ஜனநாயக ரீதியில் நாட்டை வழிநடத்த முடியும்.

இது முடியாத காரியம். ஜெனரலால் மிலிட்டரி ஆட்சியையே முன்னெடுக்க முடியும். எனவே மக்கள் இவரை ஓர் அரசியல் வாதியாக ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். அந்தளவுக்கு மக்கள் மடையர்கள் அல்லர்.

எனவே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக தேர்தலில் சவால் என்ற சாயல் கூடக் கிடையாது. நிச்சயம் அவர் வெற்றி பெறுவார்.

தமிழ் மக்கள் தேர்தல்களில் எவரை ஆதரிப்பது, என்ன முடிவெடுப்பது என்பது தொடர்பில் தமிழ் மக்கள் தடுமாறிப் போயுள்ளனர். இன்றைய குழப்பகரமான நிலைமைக்கு மேற்குலக நாடுகள் காரணமல்ல. கடந்த காலங்களில் ஏற்பட்ட யுத்தம், அதனைச் சார்ந்த அதிகாரப் பலம் மற்றும் படையினரின் பலம் போன்ற மாற்றங்களே இன்றைய குழப்பகரமான அரசியல் நிலைமைக்குக் காரணமாகும் என்றார். (ஓ-6)

# தொழிற்றிறன் கண்காட்சி பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலய முறைசாரப் பிரிவின் தொழிற்றிறன் கண்காட்சி மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அறிவித்துள்ளார்.

இக்கண்காட்சி யாழ் கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நாளை புதன்கிழமை நடைபெறும் என முன்னர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-14-7)

# இடம்பெயர்ந்த மக்களின் சுதந்திர நடமாட்டத்திற்கு ஐ.தே.க.வின் சர்வதேச ரீதியான அழுத்தங்களும் அந்நாடுகளின் அச்சுறுத்தலுமே வித்திட்டன

## ஜயலத் ஜயவர்த்தன எம்.பி.

(கொழும்பு)

முகாம்களிலுள்ள மக்களின் சுதந்திர நடமாட்டத்துக்கு அரசாங்கம் அனுமதி அளித்துள்ளமைக்கு காரணம் ஐக்கிய தேசியக் கட்சியின் அழுத்தங்களேயாகும். சர்வதேச ரீதியில் நாம் குரல் கொடுத்ததன் பிரதிபலனே தற்போது கிடைத்துள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்தார்.

அரசாங்கம் மக்களை மீளக் குடியேற்றவில்லை. மாறாக பாடசாலைக் கட்டிடங்களிலேயே தங்க வைத்துள்ளது என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

எதிர்வரும் டிசம்பர் முதலாம் திகதி தொடக்கம் முகாம் மக்களுக்கு சுதந்திரமாக நடமாட அனுமதியும் மீள் குடியேற்றத்திற்கு ஒரு குடும்பத்திற்கு ரூ. 50 ஆயிரம் வீதம் வழங்கப்படுமென்றும் அரசாங்கம் விடுத்துள்ள அறிவிப்பு தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் விசேட பிரதிநிதியாக அண்மையில் ஜெனிவா சென்று ஐ.நா மனித உரிமை ஆணையாளர் மற்றும் இங்கிலாந்தில் அணிசேரா நாட்டு பிரதிநிதிகளையும் சர்வதேச மனித உரிமை ஆர்வலர்களையும் சந்தித்து யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்களை அடிமைகளாக அரசாங்கம் இடைத்தங்கல் முகாம்களில் அடைத்து வைத்திருப்பது தொடர்பாகவும் அம் மக்களுக்கு அடிப்படை வசதிகள் வழங்கப்படாது துன்புறுத்தப்படுவது தொடர்பாகவும் பிரதான எதிர்க்கட்சி என்ற நிலையில் தெளிவுபடுத்தினேன்.

இது தொடர்பில் ஐ.நா மனித உரிமை அமைப்புகள் உட்பட சர்வதேச அமைப்புகள் அம் மக்களை விடுதலை செய்ய வேண்டுமென்றும் அம்மக்களின் சுதந்திர நடமாட்டத்திற்கு இடமளித்து சொந்தக் கிராமங்களில் தங்க வைக்கப்பட வேண்டுமென்றும் இலங்கை அரசாங்கத்தின் மீது வற்புறுத்தலை மேற்கொண்டன.

நாட்டின் பிரதான எதிர்க் கட்சியான ஐ.தே. கட்சியின் சர்வதேச ரீதியிலான தெளிவுபடுத்தல்களும் அந்நாடுகளின் வற்புறுத்தல்களும் மக்களின் சுதந்திர நடமாட்டத்திற்கு வித்திட்டன.

அத்தோடு இம் மக்களை அரசாங்கம் மீளக் குடியேற்றியதாகக் கூறுவதில் உண்மையில்லை. அவர்களை பாடசாலைகளிலும் பொது இடங்களிலும் தற்காலிகமாக தங்க வைத்துள்ளது.

மேலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் மக்களை மீளக் குடியமர்த்தியதாக அரசாங்கம் கூறுகிறது. எனவே பிரதான எதிர்க் கட்சியான எமக்கு அம்மாவட்டங்களுக்குச் சென்று மக்களின் உண்மை நிலையை தெரிந்து கொள்வதற்கு அரசாங்கம் அனுமதி வழங்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (ஓ-6)

# இரவில் நல்ல தூக்கம் வர வேண்டுமா?

# சத்தான உணவுகளை உட்கொள்ளுங்கள்

பணத்துக்கும் குறைவிருக்காது ; சந்தோஷத்துக்கும் குறைவிருக்காது ஆனால் இரவு படுத்தால் மட்டும் தூககம் வராது.

கடன் தொல்லையால் கிரெடிட் கார்ட் பாக்கியை கட்டாததால [illegible] போன்ற காரணங்களால் தூக்கம் வராமல தவி[illegible] ள்ளனர். ஆனால் எந்த காரணமும [illegible] தூக்கம் வராமல் தவிப்பவர்கள் புலமபின[illegible] மட்டும் போதாது.

இரவில் தூக்கம் வரவில்லையா...? அப்படியானால் ஒரு கப் பால் சாப்பிடு ; புத்தகம் படி ; டிவி பார்... இப்படி யோசனை சொல்பவர்கள் இருக்கவே செய்கின்றனர்.

நம்மில் சிலர் டாக்டரை தவிர எல்லோரிடமும் இன்னும் சொல்லப்போனால் மருந்துக் கடையில் வேலை செய்யும் பணியாளரிடம் கூட கேட்டு மருந்து சாப்பிடுவர்.

டாக்டரிடம் மட்டும் போய் கேட்க மாட்டார்கள். உண்மையை அறிந்து சரியான தீர்வு காண வேண்டுமானால் டாக்டரிடம் போய் தானே தெரிந்து கொள்ள முடியும்.

நாமே காரணமாக உள்ள நிலையில் தூக்கம் வராமல் தவிக்கலாம். மன அழுத்தம், கடன் தொல்லை, நண்பர்கள் பிரச்சினை, அலுவலக பிரச்சினை என்பதெல்லாம் அந்த பிரச்சினை தீர்ந்த அடுத்த நிமிடமே நல்ல தூக்கம் வரும்.

அதை பலர் செய்யாமல் தூக்கம் வராததற்கு போய்மருந்து சாப்பிடுவர். கண்ணை மூடினாலும் கனவில் கடன்காரர்கள் தானே வருவர். நம் உடல் நலனுக்கு விற்றமின்கள், கனிச் சத்துக்கள் தான் மிக மிக முக்கியம்.

உணவில் கிடைக்காத நிலையில் மருந்து மாத்திரை மூலம் ஈடு செய்வது டாக்டர்கள் வழக்கம். சத்தான உணவில் குறைவில்லாமல் இருந்தால் உடல்நலனில் குறைவே இருக்காது என்பது தான் டாக்டர்களின் அடிப்படை கருத்து.



தூக்கம் சரிவர வராததற்கு இரு முக்கிய சததுக்கள் குறைபாடு தான் காரணம். ஒன்று கல்சியம், இன்னொன்று மக்னீசியம்.

குறிப்பாக பெண்களுக்கு தூக்கம் வராததற்கு இவற்றின் குறைபாடு தான் காரணம். நரம்பு மண்டலத்தை அமைதிப்படுத்தி அதன் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவது கல்சியம்தான்.

கல்சியம் எலும்புகளின் திடத்தன்மைக்கும் மிக முக்கிய மானது. மூட்டு பாதிப்பு வராமல் இருக்க பெண்கள் கல்சியம் சார்ந்த பால் மற்றும் பால் பொருட்கள், சோயா, வெங்காயம் போன்ற காய்கறி வகைகள், பாதம் பருப்பு உட்பட சில வகை தானியங்கள், தோடம்பழம், எலுமிச்சை போன்றவற்றை சேர்த்துக் கொள்வது நல்லது.

இதுபோலத்தான் மக்னீசியம், தூக்கத்துக்கு உற்ற நண்பன். கல்சியம் நரம்புகளை அமைதிப்படுத்துகிறது என்றால் மக்னீசியம் மூளையை அமைதிப்படுத்துகிறது. கரும்பச்சை நிறத்திலான கீரை வகைகள், காய்கறிகளை உணவில் அடிக்கடி சேர்த்துக் கொள்ள வேண்டும்.

தினமும் 500 மில்லி கிராம் மக்னீசியம் சேர்த்துக் கொண்டாலே போதும். உணவில் பயன்ப்டுத்தப்படும் சிலவகை தானியங்கள், பருப்பு வகைகள், பால் பொருட்களில் மக்னீசியம் உள்ளது.

இது மட்டுமின்றி இரும்பு, செப்பு போன்ற கனிச் சத்துக்களும் தூக்கத்துக்கு உதவுகின்றன. முட்டை, மீன் உணவு போன்றவற்றில் இந்த சத்துக்கள் உள்ளன. செம்பில் நோர்பின்பைன் இரும்பில் டோபாமைன் ஆகிய கனிச்சத்துக்கள் உள்ளன. தூக்கத்துக்கு இந்த இரண்டும் தான் கைகொடுக்கின்றன. உடலில் இந்த சத்துக்கள் இல்லாததால் தூக்கம் கெடுகிறது.

தூக்கம் வர வேண்டுமானால் விற்றமின் பி சத்தும் தேவை. உடலில் ட்ரைப்டோபன் உட்பட சில வகை அமினோ அமில சத்துக்கள் தூக்கத்தை ஆழ்நிலைக்கு கொண்டு செல்கின்றன. மது, சிகரெட் பழக்கம் மற்றும் மன அழுத்தம் போன்றவற்றால் இந்த அமிலச் சத்துக்கள் குறைகின்றன.

இதை ஈடு செய்ய விற்றமின் பி சத்து மாத்திரைகள் சாப்பிட வேண்டும். சைவ உணவு சாப்பிடுவோருக்கு தூக்கம் வராமல் இருப்பதற்கு அவர்களின் சில உணவு முறைகள்தான் காரணம். இதனால் பலரும் விற்றமின் பி மாத்திரை, மருந்துகள் எடுத்துக் கொள்கின்றனர்.

இதுபோல விற்றமின் ஏ மற்றும் டி ஆகியவையும் முக்கியம். நரம்பு மண்டலத்தையும், மூளையையும் சமப்படுத்தி உடல் செயற்பாடுகளை முடக்கி தூக்கத்துக்கு வழி வகுக்கின்றன. தூக்கம் வராமல் தவிர்ப்பதற்கு மக்னீசியம், விற்றமின், கனிச் சத்துக்கள் குறைபாடு போல சுரப்பிகளின் செயற்பாடும் முக்கியம். குறிப்பாக மேலடோனின் என்ற சுரப்பி, இரவில் அதிகம் சுரந்து தூக்கத்துக்கு அழைத்துச் செல்கிறது. அவசரம் அவசரமாக எழுவது, சாப்பிடுவது அதே வேகத்தில் அலுவலகம் போய் திரும்புவது, இரவில் திரும்பிய பின் சாப்பிடுவது, அதே வேகத்தில் படுப்பது என்ற பழக்கம் சரியானதல்ல.

இப்படி செய்தால் நாற்பதில் வேலையை காட்டி விடும். அப்போது தான் டாக்டரிடம் அடிக்கடி செல்ல வேண்டியிருக்கும். சாப்பிடும் உணவு குறைந்து போய் மருந்து, மாத்திரைகளை பட்டியல் போட்டு சாப்பிட வேண்டியிருக்கும். இது தேவையா?




## பகல் தூக்கம் நல்லதா?



'அப்ஸ்ட்ரக்டிவ் ஸ்லீப் அப்னியா' (ஓ.எஸ்.ஏ) என்பது தொண்டைப் பின் பக்கத்தில் உள்ள தசை நார் பாதிப்பதால் இரவில் தூங்க விடாமல் அவ்வப்போது எழுப்பி விடும் கோளாறு. இதனால் பகலில் தூங்க வேண்டிய காட்டாயம் ஏற்படும்.

பகலில் தூங்கினால் மட்டும் நல்லதா? இது தான் சக்கர நோய்க்கு காரணமாகிவிடுகிறது. சமீபத்திய ஆய்வுகளில் இந்த விடயம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இரவில் தூக்கம் வராமல் தவிப்பவர்கள் உடனே அதைத் தவிர்க்க சிகிச்சை பெறுவது தான் நல்லது.

## உடல் ஆரோக்கியத்திற்கு...

சர்வதேச அளவிலேயே இப்போது பல நாட்டு நிபுணர்களும் சொல்லும் ஒருமித்த கருத்து என்ன தெரியுமா?



இதய நோய், சர்க்கரை நோய் போன்றவற்றை தவிர்த்து ஆரோக்கியமாக இருக்க தானிய வகை உணவும், பல்வேறு கடலை வகை உணவும் தான் நல்லது என்கின்றனர்.

விளக்கிய அரிசி சாதத்தை விட, புழுங்கல் அரிசி சாதம் நல்லது.

அதுபோல பழங்கள், பச்சைக் காய்கறிகள் கலந்து சாலட் எப்படியாவது ஒரு வேளை சாப்பிடுவது மிக நல்லது. அமெரிக்காவில் இப்போதெல்லாம் இது தான் முக்கிய டயட்டே.

## இடுப்பு பெருத்தால்... பெண்ணே உஷார்



பெண்களுக்கு அதிகம் வெயிட் போட்டால் பல கோளாறுகளுக்கு காரணமாகி விடுகிறது என்பது தெரிந்தது தான்!

ஆனால் சிலருக்கு ஆஸ்துமாவும் வரும் என்றும் தெரியவந்துள்ளது. 18 வயதிற்கு மேல் உள்ள பெண்களுக்கு பாடிமாஸ்இன்டெக்ஸ் எனப்படும் உடற் திணிவுச் சுட்டி 30யைத் தாண்டி விட்டால் உசாராக இருக்கவேண்டும். 30க்கு மேல் ஒன்று கூடினாலும் டாக்டரைப் பார்பது நல்லது. அப்படியே விட்டு விட்டால் சிலருக்கு ஆஸ்துமா கோளாறுகள் கூட வரும் வாய்ப்பு அதிகம்.

இடுப்பு பெருத்தாலும் தொல்லை தான். 88 சென்ரீ மீற்றர் அல்லது 34 அங்குலம் சுற்றளவுக்கு மேல் போனால் கவனித்துக்கொள்ளத்தான் வேண்டும்.

## எவ்வளவு தண்ணீர் குடித்தாலும்...



பொதுவாக டாக்டர்கள் சொல்வது: அதிகமாகத் தண்ணீர் குடியுங்கள். அதிக நார்ச்சத்துள்ள காய்கறிகள், தானியவகை உணவுகளை சாப்பிடுங்கள் என்பது தான்.

இவையெல்லாம் கலோரி அதிகமில்லாத சத்தானவை என்பதால் உடல் ஆரோக்கியத்திற்கு மிக நல்லது.

குளிர்பானங்கள் பருகுவதை விட சாதாரண தண்ணீர் குடித்தால் பல நோய்களைத் தவிர்க்க முடிகிறதாம். அதிலும் இளம் வயதில் இருந்தே பழக்கம் வந்து விட்டால்... எதற்கும் கவலைப்பட வேண்டியதில்லை என்பது தான் டாக்டர்கள் கூற்று.

# கல்விப் பாரம்பரியமும் சேர்.பொன் இராமநாதனும்

04



**சைவ மங்கையர் வித்தியாலயத்தின் ஆரம்பகால அதிபராக இருந்த செல்வி நாகம்மாள் காசிப்பிள்ளையின் ஞாபகார்த்த விழாவைச் (23.05.2009) சைவமங்கையர் கழகம் நடாத்திய போது அதில் கலந்துகொண்ட பேராசிரியர்சி.க.சிற்றம்பலம்"சைவக்கல்வி பாரம்பரியமும் சேர்.பொன் இராமநாதனும் - ஒருநோக்கு" என்ற பொருளில் ஆற்றிய உரை இங்கு பிரசுரிக்கப்படுகிறது.**

எவ்வாறாயினும் நாவலர் அவர்கள் மாற்றங்களைச் சீரணித்துக் கொள்ளும் பண்புக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கவில்லை. பழமை பேணும் பண்பையே பெரிதும் போற்றினார். ஆகையாலேதான் அவர் கண்ட கல்வியானது சமயத்தையும் தமிழையும் அத்திவாரமாகக் கொள்ளலாயிற்று. அக் கல்வியில் சமய சாஸ்த்திர முடிபுகள் உறுதியாகவும் அதிகார பூர்வமாகவும் வலியுறுத்தப்பட்டது. கிறிஸ்தவர்கள் கையாண்ட பிரசங்கப் பிரசார முறை, வசன ரூபத்தில் அமைந்த வினா விடைகள் , பாடநூல்கள், வசனநூல்கள், துண்டுப் பிரசுரங்கள், பாடசாலைகள் மூலம் சமயப் போதனை ஆகியனவற்றை நாவலரும் பின்பற்றினார். 1847 ஆம் ஆண்டில் வண்ணைச் சிவன் கோயிலில் ஆரம்பமாகிப் பின்னர் ஏனைய பகுதிகளிலும் நடைபெற்ற சமயப் பிரசங்கங்கள் சைவ சமயத் தத்துவங்களை இலகுவாக விளக்குவனவாயின. 1848 ஆம் ஆண்டில் பல்வேறு தலைப்புகளில் நாவலராலும் கார்த்திகேய ஐயராலும் செய்யப்பட்ட இருபத்தொன்பது பிரசங்கங்கள் கிறிஸ்தவ பாதிரிமார் மத்தியில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியது. கிறிஸ்தவ சமயப் பாதிரிமாராலும், சைவசமய அறிவிலிகளாலும் புராணங்களுக்குக் கொடுக்கப்பட்ட போலி வியாக்கியானங்கள் அர்த்தமற்றவையாக்கப்பட்டன. அதுமட்டுமன்றிச் சைவர்கள் மத்தியிலும் சில திருத்தங்களை ஏற்படுத்தும் வகையிலும் அவை அமைந்திருந்தன.

1848 இல் நாவலர் அவர்கள் வண்ணார் பண்ணையில் தாபித்த சைவப் பிரகாச வித்தியாசாலையைத் தொடர்ந்து நாவலரினதும் பிற தனிப்பட்டோரினதும் முயற்சிகளினால் கந்தர்மடம், இனுவில்,கோப்பாய்,புலோலி, போன்ற இடங்களிற் சைவத் தமிழப் பாடசாலைகள் தோன்றின. ஆரம்பகாலந் தொடக்கம் நாவலரது சைவப் பிரகாச வித்தியாசாலை நிதி நெருக்கடியை நோக்கியிருந்தது. எனினும், சைவர்களது விடாமுயற்சியால் இறுதியில் 1870 இல் இதற்கு அரச நன்கொடை கிடைத்தது. இங்கே ஆங்கிலம் போதிக்கப்பட்டாலும் ஒரு சுய மொழிப் பாடசாலையாகவே இது பதிவு செய்யப்பட்டது. எனினும்,அரசாங்கத்தின் அசிரத்தையாலும்,அரசாங்கம் அங்கீகாரம் தர மறுத்ததாலும்,கிறிஸ்தவர்களின் எதிர்ப்பினாலும் சைவர்களால் பாடசாலைகள் நிறுவ முடியவில்லை.

சமயச் சின்னங்களாகிய திருநீறு , சந்தனம் போன்றவற்றை அகற்ற மறுத்த மாணவர்களை வெஸ்லியன் பாடசாலைகளிலிருந்து நீக்கப்பட்டதற்கு ஈடு செய்யும் வகையில் 1872 ஆம் ஆண்டில் சைவ -ஆங்கில வித்தியாசாலையை நாவலர் நிறுவினார். இப் பாடசாலையின் தோற்றத்தினால் யாழ்ப்பாண மத்திய கல்லூரியின் மாணவர் தொகை வீழ்ச்சியுற்றது. எனினும் பணமுடைமையினாலும், அரச அங்கீகாரமின்மையாலும் 1876 இல் இப் பாடசாலை மூடப்பட்டது.

நாவலரது பணி பள்ளிக்கூடங்களை நிறுவுவதோடு மட்டும் நின்றுவிடவில்லை. மாணவருக்கு ஏற்ற சமயப் பாடநூல்களை ஆக்கி வெளியிடுதலும் இவரது பணியாகியது. மாணவரின் அறிவு நிலையை மனங்கொண்டு தயாரிக்கப்பட்ட முதல் தமிழ்நூல் நாவலரின் பாலபாடமே எனலாம்.நாவலர் எழுதிய நான்கு பாலபாடங்களிலும் கல்விப் போதனை முறையைப் பெருமளவுக்கு மனங்கொண்டு மாணவனின் உடல், உள வளர்ச்சியின் அடிப்படை வகுக்கப்பட்டுள்ளது. மொழியறிவைப் படிப்படியாக வளர்த்துச் செல்வதற்கு வசதியாகவும், செய்யுள் இலக்கியங்களை இலகுவாக தொடங்கிப் படிப்படியாகக் கற்கத் தக்கவகையில் அமைக்கப்பட்டன. பாலபாடங்களில் தமிழ் உரை நடைப்பகுதியையும் நாவலர் புகுத்தினார்.

நாவலரின் பாலபாடம், சைவவினா விடை ஆகியனபற்றிக் கூறவந்த பண்டிதமணி கணபதிப்பிள்ளைஅவர்கள்" இரண்டாம் சைவ வினாவிடையும் நான்காம் பாலபாடமும் சைவத்திற்கு இரு கண்கள்.சைவ சாஸ்திர சாரங்கள்" என்றார்.எனினும் விஞ்ஞானத் தொழில்நுட்ப விரிவுகளின் தாக்கம் நாவலர் காலத்தில் அவ்வளவாக உணரப்படவில்லை. விஞ்ஞான நோக்குப் பற்றிய உணர்வோ அன்றி அதன் நலந்தீங்குகள் பற்றிய எண்ணமோ நாவலரின் கவனத்தை அன்று ஈர்க்கவில்லை.

**நாவலர் மறைவும் அதன் தாக்கமும்**

நாவலர் மறைந்த பின்னர் இவ்வியக்கம் சிறிது தளர்ச்சியடைந்து காணப்பட்டாலும் வெகுவிரைவில் முந்திய காலப்பகுதியையும் விடச் சுறுசுறுப்புடன் செயற்பட ஆரம்பித்தது. முந்திய காலப் பகுதியைப் போலன்றி இக் கால இயக்கத்தினை வழி நடாத்தியோர் நாவலரின் நன் மாணாக்கர்களாகிய வித்துவான் சிரோமணி பொன்னம்பலம்பிள்ளை, ந.கைலாச பிள்ளையுடன் ஆங்கிலக் கல்வியின் முழுப் பயனைப் பெற்று அரச உத்தியோகங்களில் அமர்ந்தவர்களுமாவர். சட்டவல்லுநர்களாகிய எஸ்.நாகலிங்கம், வீ. காசிப்பிள்ளை இளைப்பாறிய நீதிபதி ந. செல்லப்பாபிள்ளை, பொருள் வசதி படைத்த சி.த.மு. பசுபதிச் செட்டியார் போன்றோர் இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். கிறிஸ்தவ பாடசாலைகளிற் பயின்ற இவர்களுக்கு நாவலரின் பணிகளும் அக்கால இந்தியாவில் சமய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திய 'ஆரிய சமாஜ்' 'பிரமசமாஜ்' போன்ற சபைகளின் பணிகளும், இராமகிருஷ்ணர், விவேகானந்தர் ஆகியோரது சமயப் போதனைகளும் புதிய தெம்பை அளித்தன. இதனால் 1880 இல் நாவலரின் பணியைத் தொடர்ந்து மேற்கொள்ளச் " சைவப் பிரகாச சமாஜம்" என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டதோடு ' உதய பானு' என்ற பத்திரிகையும் வெளியிடப்பட்டது.

இதன்பின்னர் 1888 இல் சைவ பரிபாலன சபை உருவாக்கப்பட்டது. இதன் உருவாக்கத்தில் சேர்.பொன். இராமநாதனும் உதவினார் என்பதுவும் குறிப்பிடத்தக்கது. இதன் முக்கிய நோக்கங்களாக உயர்தர உலகியல் கல்வியையும், சமயக் கல்வியையும் போதிக்கக்கூடிய ஆங்கிலப் பாடசாலை நிறுவதல், பெண்களைப் படிப்பித்தல் ஆகியன அமைந்தன. அத்துடன் பிரசாரத்திற்குப் பத்திரிகையின் அவசியத்தை உணர்ந்த இவர்கள் 'இந்துசாதனம்' Hindu Organ ஆகிய பத்திரிகைகளை வெளியிட்டனர். தனிப்பட்ட பிரமுகர்களின் பாடசாலைகள் தோல்வியில் முடிந்ததை அனுபவரீதியாகக் கண்ட இவர்கள் 1890 இல் நியாயவாதி நாகலிங்கம் அவர்கள் நடாத்தி வந்த பாடசாலையைப் பொறுப்பேற்று இந்து உயர்தரப் பாடசாலை என்ற பெயருடன் நடாத்தினர்.



சேர்.பொன்னம்பலம் இராமநாதன்

இப்பாடசாலையின் வளர்ச்சி இந்து சமய வளர்ச்சியாகும் எனக் கருதிய சைவர்கள் இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக பலவாறு உழைத்தனர். பின்னர் யாழ்ப்பாண இந்துக் கல்லூரியாக இது வளர்ச்சிபெற 1902இல் இதனை நிர்வகிக்க திருப்பி 'யாழ்ப்பாண இந்துக்கல்லூரி அதிகார சபை' நிறுவப்பட்டது. கல்லூரியின் அபிவிருத்தியையே நோக்காகக் கொண்டு இச் சபை அமைக்கப்பட்டாலும் இதன் செயற்றிறமை பலராலும் மதிக்கப்பட்டு, கொக்குவில், உரும்பிராய், வட்டுக்கோட்டை, காரைநகர், சாவகச்சேரி, தொண்டைமானாறு ஆகிய இடங்களில் ஆரம்பிக்கப்பட்ட இந்து ஆங்கிலப் பாடசாலைகள் இந்துக் கல்லூரிகளாகி அதனுடன் இயங்கும் நிலை உருவாகியது. இத்தகைய பிணைப்பின் வாயிலாக பள்ளிக்கூடங்கள் ஒத்துழைத்து, அதிபர்கள், ஆசிரியர்களை ஒன்றுக்கொன்று கொடுத்து,பொதுப் பரீட்சைகளை நடாத்தி தரமான கல்வியை வளர்க்கக்கூடியதாக இருந்தது. அன்று யாழ்ப்பாணத்தில் பரவியிருந்த கிறிஸ்தவப் பள்ளிக்கூட கட்டமைப்புக்கு இணையான ஒரு அமைப்பாக யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிகாரசபை விளங்கியது.

**பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்**

(தொடரும்)

---

## வடபகுதி மீன்பிடித்துறை அபிவிருத்திக்கு 1165 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

மஹிந்த சிந்தனையில் கீழ் வடமாகாண மீன்பிடித்துறை அபிவிருத்திக்கென அரசாங்கம் பல திட்டங்களை மேற்கொண்டு வருகிறது.

அதன் ஓர் அங்கமாக வட மாகாணத்தில் மீன்பிடித்துறை அபிவிருத்திக்கான மத்திய கால திட்டத்திற்கென ஆயிரத்து 165 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சு தெரிவித்தது.

இதன்படி யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் பல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சு உயரதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

வடக்கிலுள்ள மீன்பிடித் துறைமுகங்கள், இறங்குதுறைகள் என்பன அபிவிருத்தி செய்யப்பட்டு வருவதோடு நாரா நிறுவன பிரதேச அலுவலகங்களும் அங்கு அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுதவிர நன்னீர் மீன் வளர்ப்புத் திட்டங்களும், சிறிய மீன் குஞ்சுகளை வளர்க்கும் நிலையங்களும் ஆரம்பிக்கப்படவுள்ளன. (ஓ-6)

---

## ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு உத்தியோகபூர்வ இல்லத்தில் மேலும் சிலகாலம் தங்கியிருக்க அனுமதி

(கொழும்பு)

ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு, உத்தியோகபூர்வ இல்லத்தில மேலும் சில காலம் தங்கியிருப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார். இதன்படி, கொழும்பு புல்லர்ஸ் பிளோஸில் உள்ள கூட்டுப் படைகளின் கட்டளைத் தளபதி உத்தியோக பூர்வ இல்லத்தில், ஜெனரல் பொன்சேகா இன்னும் சில காலம் தங்கியிருக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கூட்டுப்படைகளின் கட்டளைத் தளபதி பதவியிலிருந்து ஓய்வுபெற்றதனைத் தொடர்ந்து அரசாங்கம் குறித்த உத்தியோகபூர்வ இல்லங்களை ஒப்படைக்குமாறு ஜெனரல் சரத்பொன்சேகாவிடம் கோரியிருந்தது.

எனினும், உத்தியோகபூர்வ இல்லத்தை ஒப்படைப்பதற்கு கால அவகாசம் தேவையென ஜெனரல் பொன்சேகா குறிப்பிட்டிருந்தார்.

இந்தக் கோரிக்கைக்கு மதிப்பளிக்கும் வகையில் சிலகாலம் தங்கியிருக்க அனுமதி வழங்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவுறுத்தல் விடுத்ததாக, வீரதுங்க சிங்கள ஊடகமொன்றுக்கு செவ்வியளித்துள்ளார். (ஓ-6)

---

### லங்கா பத்திரிகையின் ஆசிரியர்

## இரகசியப் பொலிஸாரினால் விசாரணைக்கு அழைப்பு

ஜே.வி.பி.ஆதரவு பத்திரிகையான லங்கா பத்திரிகையின் பிரதம ஆசிரியர் இரகசியப் பொலிஸாரினால் விசாரணைக்குட்படுத்தப் படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பத்திரிகையில் நேற்றுமுன்தினம் பிரசுரமான பிரதான செய்தியான ஜெனரல் சரத்பொன்சேகா கொலை முயற்சி என்ற செய்தி தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படவுள்ளதாகவும், இதுதொடர்பாக லங்கா பத்திரிகையின் பிரதம ஆசிரியர் இரகசியப் பொலிஸ் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-6)

---

## இலங்கையிலிருந்து ஜப்பானுக்கு கஞ்சா கடத்திய ஜப்பானியர் கைது

இலங்கையிலிருந்து ஜப்பானுக்கு கஞ்சா போதைப்பொருளைக் கடத்திய ஜப்பானியர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.தேயிலை என்ற பெயரில் விமான தபால்மூலம் குறித்த இளைஞர் கஞ்சா போதைப்பொருளை மிகவும் சூட்சுமமான முறையில் கடத்தியுள்ளார்.

குறித்த ஜப்பானிய இளைஞரை கேகாலை போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் கைப்பற்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுற்றாடல் ஆர்வலர் என அடையாளப் படுத்திக் கொண்ட குறித்த நபர் இவ்வாறு பல தடவைகள் போதைப் பொருளைக் கடத்தியுள்ளார்.

21 வயதான குறித்த ஜப்பானிய இளைஞரை பொலிஸார் விசாரணைக்கு உட்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

# விவாத அரங்கு 1

## சமூகத் தொடர்பு ஏற்பட இடமாற்றம் அவசியம்

வலம்புரி வாசகர்களுக்கு இதயம் கனிந்த இதமான வணக்கங்கள்.

வாசகர்களின் சிந்தனை எண்ணங்களை தூண்டும் வகையில் விவாத அரங்கு எனும் நிகழ்வின் ஊடாக ஒவ்வொரு வாசக நெஞ்சங்களை தன் பக்கம் ஈர்க்க வைத்துள் ளது.

முதலாவது விவாதப்பொருளே வாசகர்களின் சிந்தனைகளுக்கு உணர்வளிக்கக் கூடிய வகையில் சிந்திக்க வைத்துள்ளது.

ஆகவே *வலம்புரிக்கு* எனது கோடான கோடி நன்றிகள் .

இடமாற்றம் என்பது பல மாற்றங்களை கொண்டு வரவல்லது. குறிப்பாக ஆசிரியர்களின் இடமாற்றம் என்பது மிக அவசியமானதும் வரவேற்றகத்தகதுமாகும். இம்மாற்றங்களானவை உடல், உள ரீதியாகவும் அறிவியல்திறன், சிந்தனை திறன், சமூகத் தொடர்புகள் மூலமாகவும், பல புதிய அனுபவங்க ளையும், புதிய உட்வேகத்தையும் ஏற்படுத்த வல்லவை.

குறிப்பிட்ட ஒரே பாடசாலையில் இருந்து அந்தப் பாடசாலை சார்ந்த சமூகத்தை அறிவதிலும் பார்க்க எமது குறிப்பிட்ட வாழ்க்கைக் காலத்தில் பல சமூகத்தவருடன் உறவாடவும் சமூகத்தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளவும் இடமாற்றங்கள் அவசியமாகின்றன.

பிள்ளைகளைக் கொண்டிருக்கின்ற ஆசிரியர்களுக்கு வெளி மாவட்ட இடமாற்றங்கள் உண்மையில் அதிக சிரமத்தையும், மனவேதனையையும், மனதில் புளுக்கத்தையும் ஏற்படுத்தவல்லது. உறவுகளுடன் குழந்தைகளை பராமரிப்பில் விட்டுச்சென்ற ஆசிரிய, பெற்றோர்கள் இதனால் பாதிப்படைகின்றனர்.



ஆனால் அவர்களது திருமணத்திற்கு முன்பு வருகின்ற இடமாற்றங்களை அவர்கள் மனமுவந்து ஏற்பார்களாயின் திருமணத்திற்குப்பின்னர் ஏற்படுகின்ற இடமாற்றங்களையும் அதன் விளைவுகளையும் தவிர்த்துக் கொள்ள வாய்ப்பு ஏற்படுகின்றது.

நகர்ப்புற பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் கிராமப்புற பாடசாலைகளுக்கு மாற்றலாகி வரும்பொழுது அப்பாடசாலைகளின் தன்மைகள் பற்றியும் மாணவர்களின் தன்மைகள் பற்றியும் மாணவர்களின் பழக்க வழக்கங்கள் பற்றியும் சமூகத்தவரின் ஒன்றுபட்ட இண்ணப்புப்பற்றியும் அறிந்து கொள்ள வாய்ப்பு வழங்கப்படுகின்றது.

அந்த ஆசிரியர்களுக்கு கிராமப்புற மாணவர்கள் வழங்கும் உயர் மதிப்பும், கீழ்ப்படிவும் வசதிகள் அற்ற நிலையிலும் படித்து உயர வேண்டும் என்ற தளவற்ற மன உறுதியும், நற்பழக்க வழங்கங்களும், குரு விசுவாச தன்மையும், ஆசிரியர்களை சில கணம் திகழடையச் செய்கின் றன.

இவை நகர்புற பாடசாலை மாணவரிடையே இல்லை என கூறிவிடவும் முடியாது. இவை சாா்ந்த பண்புகள்,அதிகளவில் காணப்படுவது கிராமப்புற பாடசாலைகளிலே தான் எனக் கூறுவதும் பொருத்தமாகின்றது. கிராமத்தில் இருந்து நகர்புற பாடசாலைகளுக்குச் சென்றுவரும் மாணவர்களிடமும் இத்தகைய பண்புகள் அருகியே காணப்படுகின்றன என்பதனை அனுபவ அவதானங்கள் ஊடாக அறிய முடிகின்றது.

வெளி மாவட்டங்களுக்கு இடமாற்றம் ஏற்படும் சந்தர்ப்பத்தில் மொழி அறிவு, பண்பாட்டு விழுமியங்கள் பற்றிய அறிவு, உள விருத்தி என்பன ஏற்பட்டு இடமாற்றங்களுக்கு உள்ளாகுபவர்களை பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாக்குகின்றது.

பல காலங்களாக பாடசாலைகள் அருகில் இருந்தும் தூர இடங்களுக்குச் சென்று வரும் ஆசிரியர்களுக்கு இத்தகைய இடமாற்றங்கள் ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்பதனையும் மறுப்பதற்கில்லை.

ஒரே பாடசாலையில் சமூகத்தில் இருந்து ஒரே ஆசிரிய முகங்களுடன் தொடர்புகளை வைத்திருப்பதிலும் பார்க்க இடமாற்றங்கள் மூலம் பல புதிய முகங்களுடன் நட்புக்கரம் நீட்டவும், அவர்களின் பல திறப்பட்ட குணாதிசயங்களை அறியவும், ஏனைய ஆசிரியர்களுடன் தன்னை ஒப்பிட்டு தமது நிலையினை அறிந்து கொண்டு தம்மை மேம்படுத்திக் கொள்ளவும் மாணவர்களை விட்டு விலகும் போது அவர்களது உள்ளார்ந்த நிலையை தெரிந்துகொள்ளவும், ஒவ்வொரு பாடசாலை சார்ந்த சமூகத்தின் தன்னலமற்ற அர்ப்பணித்த செயற்பாடுகளை கண்டு அகமகழவும், ஆசிரிய சேவையின் அர்ப்பணிப்புகளை ஒவ்வொரு சமூகத்தவர்களும் தெரிந்து கொள்ளும் வகையில் வெளிப்படுத்தவும் இத்தகைய இடமாற்றங்கள் அவசியமாகின்றன.

**கே.எஸ்.ரமணன்**
**அளவெட்டி**

## பாடசாலைகளில் ஏற்படும் உள்ளகப் பிரச்சினைகளை தடுக்க

### ஆசிரியர்களை இடம் மாற்றியே ஆகவேண்டும்

அரசாங்கத்துறைகளில் பணிபுரியும் ஏனைய அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் இடமாற்றங்களைப் போல ஆசிரியர்களுக்கும் இடமாற்றம் கட்டாயம் வழங்கப்படல் வேண்டும்.

ஒரே பாடசாலையில் குறிப்பிட்ட ஒரு ஆசிரியர் தொடர்ந்து பணிபுரிவது எந்த வகையிலும் நியாயமில்லை. ஒரே பாடசாலையில் தொடர்ச்சியாக கற்றல் நடவடிக்கையில் ஈடுபடுவதில் பல சிக்கல்கள் தோன்ற வழி பிறக்கும். இதன் மூலம் ஒரு ஆசிரியர் தனது பணியினை சிறப்பாகச் செய்ய முடியாத நிலை ஏற்படும். அப்படியானதொரு நிலைமை தோன்றும் போது பாதிக்கப்படுவது மாணவ சமுதாயமேயாகும்.

இன்றைய சூழலில் கிராமப்புறப் பாடசாலைகள், முதல் நகர்ப்புறப் பாடசாலைகள் வரை பிரச்சினைகள் இல்லாத பாடசாலைகளைச் காண்பது அரிது. அதிபர்+பிரதி அதிபர்களுக்கிடையில் பதவி மற்றும் பணி தொடர்பிலான முறுகல், அதிபர்+ ஆசிரியர்கள் முறுகல், ஆசிரியர்கள்+மாணவர்களிடையே பிரச்சினை என்று பல்வேறு வடிவங்களில் பாடசாலைகளில் பிரச்சினைகள் தோன்றி விஸ்வரூபமெடுப்பதனை எல்லோரும் அ வர்.



பாடசாலைகளில் மாணவர்கள், ஆசிரியர்களுக்கான பிரச்சினைகள் பூதாகரமாகி பகிஸ்கரிப்பு, போராட்டம் என்று நடைபெறுவதையும், ஊடகங்கள் வாயிலாக பார்க்கின்றோம்.

இவற்றுக் கெல்லாம் மூல காரணமாய் அமைவது ஆசிரியர்கள் இடமாற்றமின்றி தொடர்ச்சியாக பணிபுரிவதனாலாகும்.

ஆசிரியர்கள் தொடர்ச்சியாக இடமாற்றமின்றி தொடர்ந்து பணிபுரிவதனால், நீண்ட காலம் பணியாற்றியவர்கள் அதிகாரத்தை கையிலேடுத்துக் கொண்டு பிரச்சினைகளை தோற்றுவிக்கவும் வழி ஏற்படும்.

கஸ்டம், கஸ்ட மற்ற பகுதிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் பணிகளில் மாற்றமில்லாத போது ஒருவர் சுகத்தையும் சலுகைகளையும் அனுபவிக்க இன்னொருவர் கஸ்டப் பகுதிகளில் பணிபுரிந்து வேதனைப் படுவது எந்த வகையிலும் நியாயமற்றது. எனவே இடமாற்றம் என்பது ஏழு ஆண்டு என்று பாராது ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை யாவது மாற்றம் செய்வது அவசியமானதாகும்.

**ப.உதயகுமார்**
**அளவெட்டி வடக்கு.**

# இரண்டாம் அமர்வு

## ஒரே பாடசாலையில் கடமையாற்றுவது சலிப்புத்தரக் கூடியது



ஏ ழு வ ரு ட ங் க ள் ஒரே பாடசாலையில் கடமையாற்றிய ஆசிரியர்களின் இடமாற்றம் நியாயமானதும் அவசியமானதுமாகும். ஒரு பாடசாலையில் ஒரு ஆசிரியர் ஏழுவருடங்கள் பணியாற்றி வருகின்றார் என்றால் அவ் ஆசிரியர்களுக்கு சலிப்புத்தன்மை ஏற்பட வாய்ப்புண்டு.

அதேநேரம் ஒரு ஆசிரியர் தொடர்ந்து ஒரே பாடசாலையில் கல்வியினை போதிக்கின்ற போது மாணவர்களுக்கு சலிப்பு ஏற்படலாம்.

ஒரே பாடசாலையில் பணியாற்றி தனது திறமையை வெளிப்படுத்துவது போல வேறு பாடசாலைளுக்குச் சென்று தமது திறமையை வெளிப்படுத்துவது அவசியம் .

அத்தோடு ஒரே பாடசாலையின் செயற்பாடுகளை மட்டும் கண்டு வெளியுலகம் தெரியாதவர்களாய் இருப்பதைவிட வேறு பாடசாலைகளுக்குச் செல்லும் போது அப்பாடசாலையில் செயற்பாடுகள் மற்றும் இதர விடயங்களை அறிய முடியும்.

**பத்மநாதன் பிருந்தா**
**மாளிகைத்திடல்,**
**குடத்தனை கிழக்கு,**
**குடத்தனை.**

## ஆசிரியர்களிடம் சுயநலம் ஏற்படுவதை தடுக்க இம் மாற்றம் தேவை

சமூகத்தின் உள்ளார்ந்த இயல்புகளை ஆசிரியர்கள் எப்படி எல்லாம் புரிந்து வைத்திருக்கிறார்களோ தெரியாது. ஆனால் இன்றைய சமுதாயம், ஆசிரியர்கள் பற்றி மிகத் தெளிவாக புரிந்து வைத்துள்ளது.

ஓர் சமூகத்தை வடிவமைத்துக் கொள்வதில் பிரதான பங்கு ஆசிரியர்களிடம் விடப்பட்டுள்ளதனால் இவ்விவாத அரங்கில் நாம் பங்கெடுத்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

ஓர் ஆசிரியர் தொடர்ந்து ஏழு வருடங்கள் ஓர் பாடசாலையில் கடமையாற்றிய பின் வேறு பாடசாலைக்கு மாற்றமடைந்து செல்வது விரும்பக்கூடியதே.

தொடர்ந்து ஓர் பாடசாலையில் இருப்பதனால் எதிர்பார்க்கப்படுகின்ற பலாபலன்கள் குறைவடைந்து செல்வதற்கு பல காரணங்கள் இருக்கின்றன.


ஏழு வருடங்களுக்கு பின்பாவது ஆசிரியர்களை இடமாற்றம் செய்யப்பட வேண்டும் என்பதுதான் பல பெற்றோர்களின் நிலைப்பாடாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

இது சகல ஆசிரியர்கள் மட்டத்திலும் பின்பற்றப்பட வேண்டிய பொதுவான நடவடிக்கையாகவே இருக்க வேண்டும். அதிகாரிகளின் செல்வாக்கு இடமாற்றங்களுக்கு பின்னணியில் இருந்து வருவது ஆசிரியர்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தி விடலாம். கல்வியில் பாதிப்புக்கூட ஏற்பட்டு விடலாம்.

ஆசிரியர்களின் வீடுகளுக்கு அண்மையான பாடசாலைகளில் கற்பிப்பது அவர்களுக்கு பல விதங்களில் உதவியாக இருக்கலாம். ஆனால் கற்பித்தல் செயற்பாட்டின் அடைவுகள் பலவீனமான நிலையிலேயே இருந்து வருகிறது.

மாறாக கல்வி வீழ்ச்சி அடைந்து வருகிறது. தமது ஊர் வாசனையை வாயளவில் பேசிக் கொள்பவர்கள், ஊர்ப் பற்றையும் மறந்து விட்டு பட்டணத்துப் பாடசாலைகளிலும், தேசிய பாடசாலைகளிலும் தமது பிள்ளைகளைச் சேர்க்கிறார்கள்.

தாங்கள் கற்பித்தலை மேற்கொள்ள அண்மையில் தெரிவு செய்து தமது வீடுகளுக்கு பாடசாலை களை விட்டு தமது பிள்ளைகளை தூர இடங்களுக்கு சென்று கற்பிப்பதன் நோக்கம் என்ன? எனவே ஆசிரியர்க ளின் ஊர் பாடசாலை போதிப்புக்கள் முறை தவறி பிழையான பாதையிலேயே சென்றுள் ளது.



அது இன, மத பிரதேச பேதங்கள் மறந்து சேவையாற்றும் வகையில் ஏழு வருடங் களுக்கு பின்னர் இடமாற்றம் செய்து கொடுப்பது கல்வி, சமூக புத்துயிர் நடவடிக் கையாக அமையும் என்றே எண்ணுகிறேன்.

மாற்றலாகிச் சென்ற பாடசாலையில் சமூக சுற்றாடலைப் புரிந்து கொண்டு மாணவர்களைப் புரிந்து கொண்டு ஒரு மாத காலத்திற்குள்ளாகவே ஓர் ஆசிரியர் தனது கல்வித் தொழிற்பாட்டை தொடங்க முடியும்.

இது ஆசிரியர்களுக்குஇயல்பாகவே இருக்க வேண்டிய புனிதம் நிறைந்த வரலாற்று பணியாகும். சிறந்த ஆசிரியர்கள் இடமாற்றமாகிச் செல்வது மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் கவலை நிறைந்த ஓர் விடயமாக இருந்தாலும் அப்பாடசாலைக்கு சிறந்த ஆசிரியரை அனுப்பி வைப்பது கல்வி அதிகாரிகளின் கடமையாகும்.

**"தாரமும் குருவும் தலை விதிப்பயன்"** என்று கூறிவிட்டு நாம் விழிப்புற்று இருந்து விடக்கூடாது. மாணவர் சமூகத்தின் தலைவிதியை சிறப்புற வளர்த்தெடுக்க சமூகப் பார்வையுள்ள ஆசிரியர்களை வளர்த்தெடுப்பது தான் இன்று உள்ள அடிப்படை பிரச்சினையாகும். அப்படியானால் சிறந் த ஆசிரியர்களின் பற்றாக்குறை எதனால் ஏற் பட்டது.

எனவே ஆசிரியர்களின் பாடசாலை மாற் றம் என்பது கல்வி ஊக்குவிப்பின் ஓர் பொறி முறை நயமாகவே தோன்றியது.

**நா.விஸ்வலிங்கம்**
**அரசடி ஒழுங்கை,**
**நவாலி தெற்கு, மானிப்பாய்.**

# G.C.E. (O/L) EXAMINATION - 2009

# Model paper - English Language

## Part - II

Compiled By : Regional English Support Centre, Jaffna.

1. Read the following text. In each line each word is incorrect and it is underlined. Write the correct word in the space given. The first one is done for you.

There is (1) ....are several stages in a canning process. First the fresh food is preparing (2) ..................by cutting out spoilt and all unwanted parts. In (3)........................ the second stage the remaining parts are washing (4).................. and cut in (5) ....................pieces as required. Then food is packed into cans that can be sealed into (6)................ lids.
These cans must be cleaned and resist (7)..........................to heat. Next the cans are fills (8) ........................with the Liquid. In which the food will be preserve (9) ..................This liquid is poured in while it is still boiled (10) ...................hot in order to driving (11) ................... out the air in the food. (½ x 10 =5 Marks)

2. Change the following sentences in to passive voice.

Eg:1. Librarians keep the books in a particular order.
The books are kept in a particular order.

2. Archers sent messages from distant places to the destination within a short period.
..............................................................................
3. Drummers beat drums to pass the message.
..............................................................................
4. They use different rhythms to pass different messages.
..............................................................................
5. We can send text and graphics from one mobile phone to another.
..............................................................................
6. I Will prepare a document on the history of libraries.
..............................................................................

(1x5 =5 Marks)

3. Complete the following paragraph using the words given in brackets to form a word that fits the blank space. The first one is done for you.

"Joseph lister was born in Upton, Essex, in England in 1827. He was (1) educated (education) at the universities of London and Edinburgh 1852. In 1856 he became a Surgeon in the Edinburgh Royal In firmary or hospital. In 1861 he was (2) ............. (appoint) surgeon of the Glasgow Royal In firmary in a new (3) ............. (surgeon) unit designed to reduce gangrene and other (4)............... (infect). At that time it was more (5) ....................... (danger) to go to hospital for (6) ................. surgeon.

(1x5 =5 Marks)

4. Read the Poem and answer the questions.

We See kids infront of every school
Waving their arms like Robots
At the traffic.
They look silly, utterly stupid
With jackets that glow like
Glow – worms in the bright sunlight
Few people heed or the traffic policeman
at their side.
What's the purpose they all say.
People die when they have to die.
"Do these children think they can stop it?"

1. What are the Children doing infront of the School?
2. Do people heed them? Which line gives you the answer?
3. Who does 'they' in line 4 refer to?
4. Why do people die according to this poem?
5. Write a suitable heading to this poem

(1x5 =5 Marks)

5. Read the following extract on 'My favourite room' and fill in the blanks with suitable words given in the box. There are three extra words.

In, and, have, memories, cross garden, main, little, friends, particularly, occasions, daily, Christmas, it's, on, to.

My favourite room is our kitchen. Perhaps the (1) kitchen is the most important room (2) .......... many houses, but it is (3).......... so in our house because (4)......... not only where we cook (5)........... eat but it's also the (6)........... meeting place for family and (7)............. I have so many happy (8) .......... of times spent there : Special (9)......... such as home comings or cooking (10) ................ dinner ; troubled times, which lead (11)............... Comforting cups of tea in (12)................... middle of the night ; ordinary (13)..................... events such as making breakfast (14) .............. dark, cold winter mornings for (15) ............., sleepy children before sending them off to school then sitting down to read the newspaper with a steaming hot mug of coffee.

(14 x ½ =7 Marks)

XIV. Write on article on
"What can we do to have a better environment" for the school magazine (50 words) (10 Marks)

XV. Read the following text and answer the questions given below it.

### THE MAN WHO FELL TO EARTH

BUZZ ALDRIN was part of the Apollo 11 mission in 1969 when man first walked on the moon. Neil Armstrong went first, followed by Buzz. Nothing in all his training had prepared him for that moment, and he has been traveling the world ever since, relliving the experience.

He was born in New Jersey in 1930, and he graduated from West Point Military Academy. He served as a pilot in Korea and West Germany, and in 1966 he was chosen as an astronaut.

Apollo 11 was launched to the moon on July 16. Four days later they landed near the Sea of Tranquility. The mission ended on July 24, with a spla shdown in the Pacific Ocean.

On coming back to earth, he became very depressed, and suffered from alcoholism. He had married for the first time when he was young, and had three children. His second marriage lasted a very short time.

Fortunately, he seems to have found happiness and stability with his third wife Lois Driggs Cannon, who saved him from self destruction. They now live with their three dogs in California, and have six cars 'for fun'.

He has written his autobiography and a science fiction book, called *Encounter with Tiber*, which was published in 1996.

He now travels the world, giving lecture tours and raising funds for space exploration.

1) Say whether the following statements are true or false by writing 'T' or 'F' against each sentence.
a) Buzz Aldrin went first to the moon ( )
b) He served as a pilot in London ( )
c) He was born in New Jersey in 1930 ( )
d) He has been married three times ( ) (4 x ½ = 2Marks)

2) When was Apollo 11 launched to the moon? ..............................
3) What did he suffer from? ..............................................................
4) Who saved him from self destruction? ..........................................
5) What sort of books has he written? .......................... (4x1=4 Marks)

6) Find out similar words for the following words / phrases from the text
1) Selected - 2) Come down onto the ground -
3) badly affected by a disease - 4) Luckily - (½ x 4 =2 Marks)

08) Write a composition on one of the following topics using 200-250 words.

**1) Natural disasters**
i. different kinds of natural disaster ii. Causes of these
iii. recent increase in frequency iv. Possible precautions and remedies

**2) Uses and abuses of mobile phones**
i. needs and conveniences ii. facilities
iii. threat to public security and safety
iv. damaging effect on culture (15 Marks)

நேற்று செய்த தவறை ஒப்புக் கொண்டால்–
இன்று நீ அறிவாளி என்பதை உணர்த்தும்.

– ஹாலந்து

வலம்புரி

## பயண அனுமதி நீக்கப்பட்டதன் சுகத்தை அனுபவிக்க அனுமதியுங்கள்

ஏ–9 பாதை பயணத்திற்கு அனுமதிக்கப்பட்டதனால் யாழ்ப்பாணத்திற்கும் வெளிமாவட்டங்களுக்குமான தரை வழிப்பாதை கிடைக்கப்பெற்றது.

விமானம் மற்றும் போக்குவரத்தில் அதிகூடிய செலவையும் சிரமங்களையும் சந்தித்த மக்களுக்கு இது ஆறுதலைத்தரும். அதேவேளை ஏ–9 பாதையால் பயணம் செய்வதற்கு பயண அனுமதி தடைக்கல்லாக இருந்தாலும் தற்போது அந்த பெரும் துன்பம் நீங்கிவிட்டது.

அப்படியானால் இப்போது என்ன பிரச்சினை? உங்கள் நா முணுமுணுப்பது கேட்காமல் இல்லை.

ஏ–9 பாதையில் செல்வதற்கு அனுமதியும் பயண அனுமதி நீக்கமும் வரவேற்கத்தக்க விடயங்களாயினும் பயணத்தின்போது அனுபவிக்கின்ற சிரமங்கள் அந்த சுகத்தை வரவேற்க முடியாத மனநிலையை ஏற்படுத்தி விடுகின்றது.

பயண அனுமதி நீக்கப்பட்டதும் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு செல்வதற்கும் வெளிமாவட்டங்களில் இருந்து யாழ்ப்பாணத்திற்கும் வருவதற்கும் மக்கள் முண்டியடிக்கின்றனர்.

நாளாந்தம் சுமார் இரண்டாயிரம் பேர் இவ்வாறு பயணத்தை மேற்கொள்ள தயாராக இருக்கும் தகவல்களை பெறமுடிகின்றது. இங்கு தான் படைத்தரப்பு சில மாற்று நடைமுறைகளை செய்யத்தவறிவிட்டது.

அதாவது பயண அனுமதி நீக்கிய கையோடு ஏ–9 பாதையால் தனியார் போக்குவரத்துத் துறையும் சேவையில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கியிருக்க வேண்டும்.

நாளாந்தம் இரண்டாயிரம் பேரை பயணத்திற்கு ஏற்றுக் கொள்வது வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு சுமையான பணியாகவே இருக்கும். எங்களுக்கு அப்படி எதுவும் சுமையில்லை என்று வடபிராந்திய போக்குவரத்துச் சபை கூறினால் அதனை எதிர்ப்பதற்கு நாம் தயாரில்லை.

ஆனால் இரண்டாயிரம் பேரை பரிசோதித்து பதிவு செய்து அவர்கள் அனைவரையும் பேருந்தில் ஏற்றிய பின்னர் அனைத்து பஸ்களும் படையினரின் பாதுகாப்புடன் பயணத்தை மேற்கொள்வதில் மக்கள் படும் துன்பம் போதும் என்றாகிவிடுகிறது.

அதிகாலை 4.30 மணிக்கு யாழ். புகையிரத நிலையத்திற்குச் சென்று எங்கள் வழமையான வரிசைப் பண்பாட்டில் ஊறித்திளைத்து பின்னர் பஸ்ஸில் ஏறி 100 மீற்றர் தூரத்தில் உள்ள சிங்கள மகா வித்தியாலய மைதானத்தில் இறக்கி சோதனை, பதிவு என்ற கிரியைகளை முடித்து பஸ்ஸில் முண்டியடித்து ஏறி இடம்பிடித்து, அதற்குள் வரக்கூடிய ஆசனப் பகிர்வில் சண்டை பிடித்து பின் பேச்சுவார்த்தை நடத்தி இடத்தைக் கைப்பற்றிவிடும் வரை போதும் என்றாகிவிடும்.

இவை எல்லாம் நடந்து முடிந்த பின் பஸ் பவனி எந்தனை மணிக்கு ஆரம்பமாகும் என்பது தெரியாமல் உறங்கி விழிக்க பிற்பகல் 2 மணிக்கு சிங்கள மகாவித்தியாலய மைதானத்தில் இருந்து படையினரின் விசேட மரியாதையுடன் பஸ் பேரணி புறப்படும்.

அதிகாலை 4.30 மணிக்கு வரிசையில் நின்றவர்கள் பிற்பகல் 2 மணிக்கு பயணத்தை மேற்கொள்கிறார்கள் எனில் அதற்குள் இருக்கக் கூடிய சிரமங்கள் எத்தகையது என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

இதேநிலை வெளிமாவட்டங்களில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு பயணத்தை மேற்கொள்ளும் போதும் இருக்கவே செய்கின்றது. எனவே இது தொடர்பில் தெளிவான திட்டங்களும் நடைமுறைகளும் தேவையாகின்றன. இதற்காக பின்வரும் நடைமுறைகளை கடைப்பிடிக்க முடியும். அவை,

★ பயணிகள் முழுப் பேரையும் ஏற்றிய பின் பஸ் வண்டிகள் பவனியாகச் செல்வதை தவிர்த்து பயணிகள் ஏறிமுடிந்தவுடன் 2,3 பஸ்களாக அனுப்பிவைத்தல்.

வழமைபோல படையினரின் பாதுகாப்பை நடைமுறைப்படுத்தலாம்.

★ தனியார் போக்குவரத்து துறையினரும் ஏ–9 பாதையால் பயணிகள் சேவையில் ஈடுபடுவதற்கு வாய்ப்பளித்தல்.

★ கொழும்பு, வவுனியா, மதவாச்சி, மன்னார், என்ற பகுதிகளாகப் பிரித்து அந்தந்தப் பகுதிகளில் பயணிகளிடம் சோதனை மற்றும் பதிவுகளை மேற்கொள்ளுதல் இதன் மூலம் யாழ். புகையிரத நிலையத்தில் பயணிகள் செல்வதை தவிர்க்க முடியும். அதே சமயம் புகையிரத நிலை யத்திற்கும் சிங்கள மகாவித்தியாலத்திற்கும் பஸ்ஸில் ஏறி சிரமப்படுவதை தடுக்கவும் முடியும்.

தேவையாயின் கொழும்பு செல்லும் பயணிகளை யாழ். புகையிரத நிலையத்தில் வைத்து பஸ்களில் ஏற்றி அனுப்பலாம்.

இதன் மூலம் சிங்கள மகாவித்தியாலத்திற்குள் கூடும் பயணிகளின் எண்ணிக்கையை குறைக்கவும் வழி ஏற்படும்.

இத்தகைய நடைமுறைகளை பின்பற்றுவதன் மூலம் பயண அனுமதி நீக்கப்பட்டதன் நன்மையை ஏ–9 பாதையின் பயண சுத்தையும் மக்கள் மனப்பூர்வமாக அனுபவிப்பதுடன் உரிய நேரங்களில் தாம் செல்ல வேண்டிய இடங்களுக்கு செல்லவும் முடியும். எங்கே பார்க்கலாம்?

# நிவாரணத்திற்கென வழங்கப்பட்ட பருப்பு மூடைகள் மோசடி

## கொள்கலன்களுடன் இருவர் கைது

வடக்கில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு விநியோகிப் பதற்காக அரசாங்கம் வழங்கியிருந்த சுமார் 25 இலட்சம் ரூபா பெறுமதியான 282 பருப்பு மூடைகள் மோசடியான முறையில் வவுனியாவிலிருந்து கொழும்பிற்கு எடுத்துச் சென்ற கொள்கலன் வண்டியுடன் இரண்டு சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் கடந்த சனிக்கிழமை புத்தளம் சாலியவெள காவல்துறைக் குழுவொன்றினால் கலாஓயா வீதிச் சோதனைச் சாவடியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவற்றில் தரம் வாய்ந்த 16 பருப்பு மூடைகள் , 276 மைசூர் பருப்பு மூடைகளும் அடங்குவதாகக் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். இவற்றின் மொத்த எடை 14 ஆயிரத்து 600 கிலோகிராமாகும்.

வவுனியாவில் இருந்து அநுராதபுரம் ஊடாக புத்தளம் வீதியில் கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த கொள்கலன் வண்டி தொடர்பாக சந்தேகித்த காவல் துறையினர் அதனைத் தடுத்து நிறுத்தி சோதனையிட்டுள்ளனர். இதனையடுத்து கொள்கலன் வண்டியின் சாரதி மற்றும் உதவியாளர் ஆகியோரைக் கைது செய்து விசாரனை நடத்திய போதே இந்த மோசடி குறித்த தகவல் வெளியாகியுள்ளது. வவுனியாவி லுள்ள வர்த்தகர் ஒருவர் கொழும்பு மெனிங் சந்தையிலுள்ள வர்த்தகர் ஒருவரிடம் ஒப்படைக்குமாறு இதனை வழங்கியதாக சந்தேக நபர்கள் தெரிவித்துள்ளனர் .

இதனைடிப்படையில் பருப்புத் தொகையை கொழும்பிற்கு அனுப்பிவைத்த வவுனியா வர்த்தகரைக் கைது செய்வதற்காக சாலியவெள காவல்துறைக் குழுவொன்று நேற்று முன்தினம் வவுனியா செல்ல விருந்தது.

வடபகுதியில் இடம்பெயர்ந் துள்ள மக்களுக்கு வழங்குவதற்காக அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிவாரணப் பொருட்கள் பல காலமாக மோசடியான முறையில் வவுனியாவிலிருந்து தெரியவந்துள்ளது.

இந்த மோசடியில் அரச நிவாரண சேவை அதிகாரிகளுக்கு தொடர்பிருக்கிறதா என்பதை அறிய விசாரணைகளை ஆரம்பித்திருப்பதாக சாலியவெள காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். (ஓ–6)

# பத்திரிகை ஆசிரியர் சோனாலிக்கு சர்வதேச ஊடக விருது

(கொழும்பு)

சண்டே லீடர் மற்றும் மோர்னிங் லீடர் பத்திரிகைகளின் ஆசிரியரான சோனாலி சமரசிங்க விக்கிரமதுங்கவிற்கு சர்வதேச ஊடகவிருது ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

ஒக்ஸ்பாம் சர்வதேச ஊடக சுதந்திர விருது சோனாலிக்கு வழங்கப்பட்டுள்ளது. ஊழல் மோசடி மற்றும் அதிகார துஷ்பிரயோகம் தொடர்பிலான செய்திகளை துணிச்சலுடன் வெளிச்சம் போட்டு காட்டியமைக்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. வியட்நாம் , ஜோர்ஜியா , ஈரான், கொலம்பியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 4 ஊடகவியலாளர்களுக்கும் இந்த விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சர்வதேச விருது தமக்கு பெரும் மகிழ்ச்சியையும் பெருமிதத்தையும் அளிப்பதாக சோனாலி தெரிவித்துள்ளார். இந்த விருதின் மூலம் ஊடகத்துறைக்கு தாம் ஆற்றிய பங்களிப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் ஊடக அடக்கு முறை தொடர்பான இருண்ட வரலாறுகள் தொடர் கதையாக நீடித்துக்கொண்டிருப்பதனை எவரும் மறந்துவிடக்கூடாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கை போன்ற நாடுகளில் ஊடக சுதந்திரம் மனித உரிமை மற்றும் ஜனநாயகம் போன்றவற்றை மீறப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

தனது கணவரும் , தொழில் சார் நண்பருமான லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலையைத் தொடர்ந்து தமக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் . காரணமாக நாட்டைவிட்டு வெளியேறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதாகவும் அதன் காரணமாகவே தாம் வேறு நாடு ஒன்றில் அடைக்கலம் கோரியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ–6)

## இலங்கையில் பன்றிக் காய்ச்சல் நோய் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 8 ஆக உயர்வு

(கொழும்பு)

இலங்கையில் பன்றிக் காய்ச்சல் நோய் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 8 ஆக உயர்ந்துள்ளதாகவும் 260 பேர் இந்த எச்1 என்1 என்ற *நிவ் இன்புலுவென்ஸா* நோயினால் பாதிக்கப்பட்டுள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

எனினும் நோய் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை இன்னமும் அதிகமாக இருக்கலாம் என அமைச்சு எச்சரித்துள்ளது.

இதேவேளை மத்திய மாகாணத்தில் பன்றிக் காய்ச்சல் வேகமாக பரவி வருவதுடன் பொலனறுவை அனுராதபுரம் ஆகிய வைத்தியசாலைகளில் பன்றிக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட 15 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ–6)

### முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட

## அரச உத்தியோகத்தர்களுக்கான விசேட போக்குவரத்து

(யாழ்ப்பாணம்)

தற்போது யாழ்.மாவட்டத்தில் வதிகின்ற கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் ஏற்கனவே கடமையாற்றிய அரச உத்தி யோகத்தர்கள், தமது கடமையின் நிமித்தம் போக்குவரத்துச் செய்வதற்கான விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வடமாகாண ஆளுநர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள் ளது.

இதுவிடயமாக யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியுடன் கலந்துரையாடி இவர்களின் ஆளடையாளத்தை நிரூபிப் பதற்கான தேசிய அடையாள அட்டை, உத்தியோக அடையாள அட்டை ஆகியவற்றைக் காண்பித்துப் பிரயாணத்தை மேற்கொள்வ தற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனவும் இவர்கள் வேறு எந்தவித ஏற்பாடுகளும் செய்யத் தேவையில்லை என்றும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். (ஓ)

## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் மாணவர் ஒன்றிய நிர்வாகம் பதவியேற்பு

யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் 2007/2008 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகம் நேற்று மாணவர் பொது அறையில் அனைத்துப் பீட மாணவர்கள் முன்னிலையில் பதவியேற்றுள்ளது.பல்கலைக் கழக மாணவர் ஒன்றிய முன்னாள் செயலாளர் பா.பிரதீபன் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்விற்கு பல்கலைக் கழக நலச் சேவைகள் கிளை உதவிப் பதிவாளர் ஜெயக்குமார் சிறப்பு விருந் தினராகக் கலந்து கொண்டார்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றிய முன்னாள் தலைவர் அ.பிரசன்னா சிறப்புரை ஆற்றினார். மற்றும் கலைப் பீட முன்னாள் தலைவர் கா.காந்தீபன் உரையாற்றினார்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் புதிய தலைவர் அரிகரன் மற்றும் செயலாளர் ஸ்ரீரங்கன் முதலியோர் தங்கள் தொடக்க உரைகளை ஆற்றினார்கள்.மற்றும் பீட மாணவர் ஒன்றியத் தலைவர்களும் உரையாற்றினார்கள்.யாழ்.பல்கலைக் கழக அனைத்துப் பீட மாணவர்களும் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ச)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## மனிதன் தனது விதியைத் தானே அமைக்கிறான்



எங்கள் கூட்டத்தில் வயோதிபரான கிழவர் ஒருவர் இருந்தார். அவர் *ஐயோ* இதை எப்படிக் கடந்து செல்வது? இதற்கு மேல் ஒரு அடியும் என்னால் நடக்க முடியாது! என் நெஞ்சு வெடித்து விடும் போல் இருக்கிறது என்று சொன்னார்.

*கீழே குனிந்து உங்கள் கால்களைப் பாருங்கள்* என்று நான் சொன்னேன். அவரும் அவ்விதமே நான் இப்போது உங்கள் கால்களின் கீழே உள்ள இந்தப் பாதை ஏற்கனவே நீங்கள் கடந்து வந்த சாலையாகும். மேலும் அதே சாலையைத் தான் நீங்கள் உங்கள் முன்னால் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்..... விரைவில் அதுவும் உங்கள் கால்களின் கீழ் வந்துவிடப் போகிறது என்று கூறினேன்.

மிக உயர்ந்த பொருள்களெல்லாம் உங்கள் காலடியின்கீழ் இருக்கின்றன. ஏனென்றால் உண்மை யில் நீங்கள் தெய்வீக நட்சத்திரங்களாக இருந்து கொண்டிருக்கிறீர்கள்.

# சுவிஸ் மினரல் நிறுவனத்தின் (யாழருவி)
## ஐந்தாண்டு பூர்த்தியை முன்னிட்டு வெளிவரும்
## சிறப்பிதழ் - ௨௪-௧௧-௨௦௦௯

### சமூக சேவைகள் அமைச்சரின் வாழ்த்துச் செய்தி



யாழ் குடாநாட்டிலிருந்து யாழருவி என்னும் சுத்தமான குடி நீரைச் சந்தைப் படுத்தி, இன்றுடன் ஐந்து ஆண்டுகள் பூர்த்தியடைவ தினையிட்டு அந்நிறுவனத் திற்கு எனது வாழ்த் துக்ளைத் தெரி வித்துக் கொள்வதில் பெருமகி ழ்ச்சியடை கின்றேன்.

யாழ். குடாநாட்டு மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, குறைந்த வசதிகளுக்கு மத்தியிலும் சுத்தமான குடிநீரை ஐந்து வருட காலமாகத் தயாரித்து வழங்கி வரும் நிறுவனத்தின் பணிகளைப் பாராட்டுவதுடன், உள்ளூரிலிருந்து யாழருவி குடிநீரைத் தயாரிப்பது போன்று மக்களுக்குப் பயன்படும் விதத்திலான பல்வேறு உற்பத்திப் பொருட்களைத் தயாரித்து சந்தைப்படுத் துவதின் மூலம், எமது பிரதேசத்தின் பொருளாதாரம் செழிப்படை வதுடன், மக்களின் அத்தியாவசியத் தேவைகளையும் பூர்த்தி செய்ய முடியுமென்பதை இச்சந் தர்ப்பத்தில் வலியுறுத்த விரும்பு கின்றேன்.

**அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா,**
**சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு.**




அன்பார்ந்த உறவுகளே வணக்கம்!

2004ஆம் ஆண்டு சமாதானத்தின் அடையாளமாக யாழ் குடா நாட்டில் எமது அயராத முயற்சியாலும் சுவிஸ் நாட்டு அதிகாரிகளினதும் ஆதரவினாலும், யாழ் குடாநாட்டு அதிகாரிகளினதும், பணியாளர்களது ஒத்துழைப்புடனும் பல தடைகளைத் தாண்டி "சுவிஸ்மினரல்" நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.

சர்வதேச தரத்தில் உள்ளூர் மினரல்கள் அடங்கிய குடிநீரை தயாரித்து எமது மக்களுக்கு வழங்கும் எமது குறிக்கோள்களை அடைவதற்கு எமது நிறுவனம் சந்தித்த தடைகளையும், சாவால்களையும், நடைமுறை சிக்கல்களையும் வார்த்தை ஜாலங்களுக்குள் அடக்கி விட முடியாதவை.

இத் தடைகளையும் சவால்களையும் கண்டு நாம் எமது முயற்சியை இடை நடுவில் விட்டுவிடாமல் தொடர்ந்தும் அயராது உழைத்ததன் பலனை முதற்கட்டமாக நாம் சுனாமி அனர்த்தத்தின் போது குடாநாட்டு மக்களுக்கு ஏற்பட்ட குடிநீர் தட்டுப்பாட்டை "சுவிஸ்மினரல்" நிறுவனம் மூலம் உடனடியாக நிவர்த்தி செய்ததன் மூலமும், யாழ். குடாநாட்டுக்கான போக்குவரத்துகள், தடைப்பட்ட போது யாழ். மருத்துவமனைகளும், மின்சார சபையினதும் புதிய இயந்திரங்களை இயக்கு வதற்கும் "சுவிஸ்மினரல்" நிறுவனத்தின் மூலம் யாழ் குடாநாட்டு மக்களின் அத்தியா வசிய தேவைகளை இன்று வரை பூர்த்தி செய்து வருவது எமது நிறுவனத்தின் குறிக்கோளுக்கு கிடைத்த வெற்றியாகவே நாம் கருதுகின்றோம்.

எமது நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் இன்று வரை யாழ். குடாநாட்டு மக்களுக்கான அனைத்து நிவாரணப் பணிகளுக்குமான எமது முழுமையான ஆதரவை வழங்கி வருவது எமக்கு மிகப்பெரும் ஆத்ம திருப்தியையும் முழுமை யான மன நிறை வையும் தருகின்ற இவ்வேளையில் இலங்கை தர நிர்ணய சபை எமது நிறுவனத்திற்கு SLS என்ற அமைக்கப்படும் இலங்கை தரநிர்ணய சபையின் தரசான்றிதழ்களை பெறும் முதலாவது குடாநாட்டு குடிநீர் தயாரிக்கும் நிறுவனமாக எமது நிறுவனம் தெரிவு செய் யப்பட்டிருப்பது யாழ். நிறுவனத்திற்கும், எமது நிறுவனத்தின்வளர்ச்சியில் அக்கறை கொண்ட அனைவருக்கும் கிடைத்த வெற்றி யாகவே "சுவிஸ் மினரல்" நிறுவனம் கருதுகின்றது.

6 ஆவது வருடத்தில் கால்பதிக்கும் எமது நிறுவனம் எதிர் காலத்தில் யாழ் குடாநாட்டு உற்பத்தியாளர்களின் உற்பத்தி பொருட்களை வெளிநாடுகளில் சந்தைப்படுத்தும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கும் ஆரம்பகட்ட நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளதை உள்ளூர் உற்பத்தியாளர்களுக்குக் மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**உள்ளூர் உற்பத்திகளை சர்வதேச தரத்திற்கு உருவாக்குவோம்.**

மேலதிக விபரங்களுக்கு
சுவிஸ்மினரல் நிறுவனம் (யாழருவி)
Global Business Network
231, Temple Road, Nallur-Jaffna.

(3968)

### அரச அதிபரின் வாழ்த்துச் செய்தி




''எண்ணிய எண்ணியாங்கு எய் துப எண்ணியார் திண்ணிய ராகப் பெறின்'' என்ற வள்ளுவன் சொல்லுக் கிணங்க மிகுந்த உளத்திண்மையு டன் தொடங்கப்பட்ட ''யாழருவி சுவிஸ் மினரல்'' இன்று எமது மண் ணின் சேவையில் மகத்தான வெற்றி யுடன் ஐந்தாண்டுகளை நிறைவு செய் துள்ளது. "Global Business Network'' என்ற நிறுவனத்தின் கீழ் செயற்படும் ''யாழருவி சுவிஸ் மினரல்'' இன்று எம் மக்களின் அன்றாட வாழ்வுடன் இரண்டறக்கலந்துவிட்டது. பல அத்தியாவசிய சேவைகள் , நிவாரணப்பணி கள் என்பவற்றிற்கு உறுது ணையாய் நின்று செயற்பட்ட "யாழருவி சுவிஸ் மினரலின்" சேவை சுனாமி மற்றும் வெள்ள அனர்த்தங்களின் போது எம் மக்களின் மத்தியில் உன்னதமாய் உணரப்பட்டது.

உள்ளூர் மூலவளங்களைக் கொண்டு எம் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் தொடக்கப்பட்ட இக் கைத்தொழில் நன்முயற்சிகளுக்கு நல்லதொரு சான்றாய் அமைந்துள்ளது. ''யாழருவி சுவிஸ் மினரல்'' தூய அருவி யாய் தொடர்ந்தும் செயற்பட்டு நாடளாவிய ரீதியில் தனது உற்பத்திகளைச் சந்தைப்படுத்தி எமது மக்களுக்கு சிறந்த தொழில் வாய்ப்புக்களை வழங்கிடவும் உள்ளூர் வளங்க ளுடன் புதிய கைத்தொழில்களை தொடங்குவோர்க்கு நல்ல தோர் எடுத்துக்காட்டாய் விளங்கிடவும் , இந்நாளில் மன முவந்து வாழ்த்துகின்றேன்.

**க.கணேஷ்**
**அரச அதிபர்/மாவட்டச் செயலர்.**
**யாழ்.மாவட்டம்.**

### பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாண மாவட்டத்தில் வாழ் கின்ற மக்களின் சுத்தமான குடிநீர் தேவையை நிவர்த்தி செய்து வரு கின்ற "சுவிஸ்மினரல்" நிறுவனம் இவ் வருடம் 5ஆவது ஆண்டு நிறைவை கொண் டாடுவது அறிந்து மனமகிழ்வடைகின் றேன். மனித னின் உடல் நலத்திற்கு சுத்தமான நீர் இன்றியமையாதாகும். அந்த வகையில் யாழ்ப்பாண மக்களின் ஆரோக்கியமான வாழ்வை எண்ணக் கருவாகக் கொண்டு சேவையாற்றி வரும் இந்நிறுவனம் நல்லூர் பிரதேசத்தில் அமைந்து ஆற்றுகின்ற பணிகள் நன்றியுடன் பாராட்டப்பட வேண்டியவையாகும்.

கடந்த 5 ஆண்டு கால சேவையில் இந்நிறுவனம் தனது உற்பத்தியைக் குடாநாடு முழுவதும் விநியோகித்து மக்கள் தாகம் தீர்த்தது மட்டுமல்லாமல் குடாநாட்டு மக்கள் சந் தித்த பல அனர்த்தங்களில் அவர்களுக்கு மகத்தான சேவை யாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில் சுனாமி வெள்ள அனர்த்தம் , நிஷாப் புயல் அனர்த்தம் மற்றும் மக்களின் மீளக் குடியமர்வு போன்ற விசேட சந்தர்ப்பங்களில் ''சுவிஸ் மினரல்'' நிறுவனம் தனது மகோன்னதமான சேவையை காலத்தின் தேவை அறிந்து ஆற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் யாழ். மாவட்டத்தில் இடம்பெறும் அரச தனியார் வைபவங்கள் மற்றும் விழாக்கள் என்பவற்றில் ''சுவிஸ்மினரல்'' தண் ணீர்ப்போத்தல்களின் இருப்பை கண்டு கொள்ள முடிகின் றது. யாழ். மக்களின் அன்றாடவாழ்வில் இந்நிறுவன உற் பத்திகள் நீக்கமுடியாத இடத்தை பிடித்துள்ளது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

பணத்தை வீணே செலவு செய்யாது மக்கள் தேவையை யும் ,பயன்மிக்க தார்மீக கடமையாகவும் காலத்திற்கு ஏற்ப பணியாற்றி வரும் ''சுவிஸ்மினரல்'' நிறுவனத்தை முன் மாதிரியாகக் கொண்டு பல நிறுவனங்கள் யாழ். மண்ணில் உருப்பெறல் அவசியமானதாகும்.

அந்த வகையில் "சுவிஸ் மினரல்" நிறுவனம் தமது சுத்த மான குடிநீர் சேவையை போல் வேறும் பல பயன்மிக்க மனிதா பிமான வர்த்தக முயற்சியில் ஈடுபடுதல் வேண்டும் என கேட் டுக்கொண்டு இனிவரும் காலங்களில் இந்நிறுவனம் பற்பல முயற்சிகளுக்கு இடமளித்து யாழ். மக்களின் நன்மதிப் பைப் பெற்று வளரவேண்டும் என்பதோடு தேசிய மட்டத்தில் மட்டுமல்ல சர்வதேச ரீதியிலும் தமது படைப்புக்கள் மூலமாக புகழ் பரப்பவேண்டும் என கேட்டுக்கொள்வதுடன் அவர்க ளால் வெளியிடப்படுகின்ற "யாழருவி" எனும் சிறப்பு மலர் பல்வேறு மட்டத்தினையும் சென்றடைந்து புகழ் பரப்ப வேண் டும் என உளமாற வாழ்த்துகின்றேன்.

**பா.செந்தில் நந்தனன்**
**பிரதேச செயலர்,**
**நல்லூர்.**

### மாநகர முதல்வரின் வாழ்த்துச் செய்தி



உள்ளூர் உற்பத்திகளை சர்வதேச தரத்தில் உருவாக்கும் நோக்குடன் 2004ஆம் ஆண்டள வில் ஆரம்பிக்கப்பட்ட ''சுவிஸ் மினரல்'' என்ற தங்கள் நிறுவனம் கடந்த 5 ஆண்டு காலத்தில் நாட் டில் ஏற்பட்ட பல்வேறு பட்ட பிரச்சி னைகளுக்கும் முகம் கொடுத்து இம் மாதம் 24ஆம் திகதி 6ஆவது ஆண்டில் வெற்றிக ரமாக கால் பதிப்பதை அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன்.

மழைக்காலத்தில் முளைக்கும் காளான்களைப் போல காலத்திற்கு காலம் பெரும் எடுப்போடு ஆட்டமாடும் பல் நிறு வனங்கள் வந்த வேகத்திலேயே மடிந்து விடுவதையும் கண்டிருக்கிறோம்.

அந்த வகையில் இல்லாது நாட்டின் அரசியல், பொரு ளாதார பிரச்சினைகளுக்கும் சுனாமி, நிஷா போன்ற இயற்கைப் பேரழிவுகளுக்கும் முகம்கொடுத்து மக்களின் சேவையை மனதில் கொண்டு 5 ஆண்டு காலம் வெற்றி கரமாக தங்கள் வர்த்தக சேவையை முன்னெடுத்துச் சென்றுள்ளீர்கள்.

மேல் நாட்டு தயாரிப்புகளுக்கு இணையாக நம் நாட் டில் தயாரிக்க நம்மால் இயலும் என்பதை கடந்த 5 ஆண்டு காலத்தில் அனுபவ ரீதியாக நிரூபித்துக் காட்டியுள்ளீர் கள்.

தங்கள் முயற்சி மென்மேலும் "ஆல்போல் தழைத்து" நாட்டின் தொழில்துறை வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என இதயம் மலர வாழ்த்துவதுடன் தங் கள் முயற்சிகளுக்கு மேலும் மேலும் பல்வளமும் , பல நல மும் கிடைக்க இறையாசி வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**திருமதி . யோ. பற்குணராசா**
**மாநகர முதல்வர் ,**
**யாழ்ப்பாணம்.**

### கிராம அலுவலரின் வாழ்த்துச்செய்தி



இன்று உலகம் மிகவும் வேக மாக மாற்றமடைந்து கொண்டிருக் கின்றது. இந்த மாற்றத்திற்கு ஏற்ப சேவைத் துறையும் மாற்றமடைய வேண்டியது காலத்தின் தேவையா கும். ஒரு நாட்டின் அபிவிருத்தியில் சேவைத்துறையின் பங்கு முக்கியமா னது. அந்தவகையில்'' மக்கள் சேவை யே மகேசன் சேவை'' என்ற தாரகை மந்திரத்தினை தனதாக்கிய ''சுவிஸ் மினரல்'' நிறுவன மானது அளப்பரிய சேவையை எம்மவருக்கு ஆற்றி வரு வது யாவரும் அறிந்ததே.

குறுகிய காலப்பகுதியில் நிறைவான தரமான சேவை யினை ஆற்றி உயர்ந்து நிமிர்ந்து நிற்கும் இந்நிறுவனத் தின் வளர்ச்சிகண்டு அகமகிழ்கின்றேன். 5ஆண்டுகள் சேவை புரிந்து "சுவிஸ்மினரல்" நிறுவனமானது பெரு மைக்குரிய நிறுவனமாக விளங்குவதுடன் வணிக உல கிலே தனக்கென முத்திரையைப் பதித்துக்கொண்ட இந் நிறுவனத்தின் 5ஆண்டு நிறைவு நாளில் வாழ்த்துகளை வழங்குவதில் மகிழ்கின்றேன்.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'' மக்களின் அன்றாட வாழ்வில் நீர் முக்கிய இடத்தினை வகிக்கின் றது. சுத்தமான நீர் அருந்துவதால் மனிதன் சுக தேகி யாக வாழ முடியும். யாழ்ப்பாண மக்களின் அன்றாட வாழ் வுக்கு மட்டுமன்றி அல்லற்படும் மக்களின் இன்னல் போக் கும் நிறுவனமாகவும் திகழ்ந்து வருகின்றது. அத்தியாவ சிய தேவைகள், மின்சார உற்பத்தி மற்றும் நீர்வாகப் பணி கள் எனப் பல்வேறு பண்பாட்டிற்கும் இந்நிறுவனம் உந்து சக்தியாக இருந்து உதவுகின்றது.

ஆழிப்பேரலையின் போது அவதிப்பட்ட எம்மவர்க ளுக்கு அபயக்கரம் நீட்டியது மட்டுமன்றி அண்மையில் வன்னியில் இருந்து யாழ். வந்த மக்களினதும் உடன டித் தேவைக்குதவியதை நான் அறிவேன். உள்ளூர் உற் பத்தியினை சர்வதேச தரத்திற்கு உயர்த்தும் பணியில் இந்நிறுவனம் அரும்பாடுபட்டு வெற்றியும் கண்டுள்ளது.

இவ்வாறான சிறப்புகள் நிறைந்து யாழ்ப்பாண மக்க ளின் வாழ்வில் பிண்ணிப்பிணைந்து இந்நிறுவனம் எமது நல்லூர் பிரதேசத்தில் அமைந்திருப்பது எமக்கெல்லாம் பெருமை சேர்க்கும் ஒரு விடயமாகும்.

செயற்கரிய சேவையால் தனக்கென இடம்பிடித்து உயர்ந்த இந்நிறுவனத்தின் வளர்ச்சி கண்டு மகிழ்வதுடன் 5ஆண்டு அகவையை அகமகிழ்ந்து கொண்டாடும் இந் நிறுவனம் இன்னும் பல நூற்றாண்டு காலம் சேவையினை வழங்கி சுகதேகிகளான மக்கள் உருவாக்கத்தில் சிறப்பு டன் பிரகாசிக்க இறையருள் வேண்டி வாழ்த்துகள் பல வும் கூற இன்புறுகின்றேன்.

**இ.இராகினி**
**கிராம அலுவலர்,**
**ஜே/108 நல்லூர், தெற்கு.**

# இந்திய-இலங்கை அணிகள் மோதும் இரண்டாவது டெஸ்ட் இன்று ஆரம்பம்



(கான்பூர்)

இந்திய-இலங்கை அணிகள் மோதும் 2-வது டெஸ்ட் போட்டி கான்பூரில் இன்று ஆரம்பமாகின்றது.

சங்கக்கார தலைமையிலான இலங்கை கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகின்றது. 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் அகமதாபாத்தில் நடந்த முதல் டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிபடைந்தது.

இந் நிலையில் 2-வது டெஸ்ட் இன்று கான்பூரில் ஆரம்பமாகின்றது. அகமதாபாத் ஆடுகளம் முழுக்கமுழுக்க துடுப்பாட்ட வீரர்களுக்குச் சாதகமாக இருந்தது.

இதனால் பந்து வீச்சாளர்கள் சிக்கி திணறிவிட்டார்கள். அகமதாபாத் டெஸ்டில் 7 வீரர்கள் சதம் அடித்தனர். இந்திய அணியில் ராவிட், தோனி, காம்பீர், டெண்டுல்கர் ஆகியோரும் இலங்கை அணியில் டில்சான், ஜெயவர்த்தன, பிரசன்ன ஜெயவர்த்தன ஆகியோரும் சதம் அடித்தனர்.

இவ்வாறான ஆடுகளம் இல்லாமல் முடிபு தெரியும் வகையில் ஆடுகளம் இருக்க வேண்டும் என்று இரு அணியின் தலைவர்களும் விருப்பம் தெரிவித்தனர்.

கான்பூர் கிரீன்பார்க் மைதானம் முதல் 3 தினங்கள் துடுப்பாட்ட வீரர்களுக்கும் கடைசி இரண்டு தினம் சுழற்பந்து வீச்சாளர்களுக்கும் சாதகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

கடைசியாக கான்பூரில் கடந்த ஏப்ரல் மாதம் நடந்த டெஸ்டில் இந்தியா 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஆனால் போட்டி மூன்று தினங்களிலேயே முடிந்து விட்டது.

இந்திய-இலங்கை அணிகள் கான்பூரில் ஒரேயொரு முறைதான் மோதியுள்ளன. 1986 ஆம் ஆண்டு நடந்த இந்த டெஸ்ட் சமநிலையானது.

இந்திய அணியில் பெரும்பாலும் மாற்றம் இருக்காது. அமித் மிஷ்ராவின் பந்து வீச்சு குறித்து கடும் விமர்சனம் எழுந்துள்ளது. அவரால் விக்கெட்டுக்களை வீழ்த்த இயலவில்லை. இதனால் அவருக்குப் பதிலாக ஓயாவுக்கு வாய்ப்புக் கொடுக்கப்படுமா? என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை அணி கூடுதலாக ஒரு சுழற்



பந்து வீச்சாளரைக் களம் இறக்கலாம். மென்டிஸுக்கு வாய்ப்புக் கிடைக்கும். முதன்முறையாக இந்திய மண்ணில் டெஸ்ட் தொடரை வெல்லும் முனைப்பில் இலங்கை அணி உள்ளது.

இன்று காலை 9.30 மணிக்கு போட்டி ஆரம்பமாகின்றது.

## சென்னைப் பொலிஸிடம் சிக்கிய நியூ.வீரர்கள்

சென்னை வந்த நியூசிலாந்து வீரர்கள் நீல் புரூம், ஆரன் ரெட்மோண்ட் ஆகியோர் மதுபோதையில் சர்ச்சை கிளப்பிய விடயம் தற்போது அம்பலமாகியுள்ளது.

பொலிஸ் விசாரணைக்குப் பின் இவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். கடந்த ஓகஸ்ட் மாதம் நடந்த புச்சிபாபு கிரிக்கெட் தொடரில் பங்கேற்க நியூசிலாந்து ஏ அணியினர் சென்னை வந்திருந்தனர்.


இந்த அணியில் ஷேன் பொன்ட், கைல் மில்ஸ், புரூம், ரெட்மோண்ட் உள்ளிட்ட நட்சத்திர வீரர்கள் இடம்பெற்றிருந்தனர்.

**போதையில் சர்ச்சை**

இதில் முன்னணி துடுப்பாட்ட வீரர்களான புரூம், ரெட்மோண்ட் பாதுகாப்பு விதிமுறைகளை மீறி ஹோட்டலை விட்டு இரகசியமாக வெளியேறியுள்ளனர். பின்னர் இரவு விடுதிக்குச் சென்ற இவர்கள் மது அருந்தியுள்ளனர். அருகிலிருந்த ஏ.ரி.எம். சென்று பணம் எடுத்துள்ளனர். போதை தலைக்கேற தெருவோரத்தில் தங்கியிருந்த ஏழைகளுக்குப் பணத்தை வாரி வழங்கியுள்ளனர்.

இதனைப் பார்த்ததும் அங்கு மக்கள் கூட்டம் திரள பெரும் அமளி ஏற்பட்டுள்ளது. தகவல் அறிந்ததும் அங்கு வந்த பொலிஸார் இருவரையும் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரணை நடத்தியுள்ளனர். இதில் நியூசிலாந்து வீரர்கள் என்பது உறுதி செய்யப்பட விடுவிக்கப்பட்டுள்ளனர்.

# டெஸ்டில் 13 ஆயிரம் ஓட்டங்கள்; சச்சின் புதிய மைல்கல்லை நோக்கி



(மும்பை)

கிரிக்கெட்டில் பல்வேறு உலக சாதனைகளைப் படைத்தவர் சச்சின் டெண்டுல்கர். டெஸ்டில் அதிக ஓட்டம், அதிக சதம், ஒரு நாள் போட்டியில் அதிக ஓட்டங்கள் உட்பட பல சாதனைகளைப் புரிந்துள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒரு நாள் தொடரின் போது அவர் 17 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்தார். இலங்கைக்கு எதிரான அகமதாபாத் டெஸ்டில் அவர் சர்வதேச ஒருநாள் போட்டி, இருபது-20 மற்றும் டெஸ்ட் போட்டிகளைச் சேர்த்து 30 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்து சாதனை படைத்தார்.

டெண்டுல்கர் மேலும் ஒருமைல் கல்லை நோக்கி நெருங்கியுள்ளார். டெஸ்டில் அவர் 13 ஆயிரம் ஓட்டங்களைத் தொட இருக்கின்றார். அதற்கு இன்னும் 123 ஓட்டங்கள் தேவை.

160 டெஸ்ட் விளையாடி அவர் 12 ஆயிரத்து 877 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இதில் 43 சதமும் 53 அரைச் சதமும் அடித்துள்ளார்.

லாரா (மேற்கிந்தியத் தீவுகள்) 11 ஆயிரத்து 953 ஓட்டங்கள் எடுத்து 2 -வது இடத்திலும் பொன்டிங் (அவுஸ்திரேலியா) 11 ஆயிரத்து 345 ஓட்டங்கள் எடுத்து 3-வது இடத்திலும் உள்ளனர்.

அகமதாபாத் டெஸ்டில் முதல் இன்னிங்ஸில் சொதப்பிய டெண்டுல்கர் 2-வது இன்னிங்ஸில் சதம் அடித்து முத்திரை பதித்தார். அவர் சிறப்பாக ஆடி தோல்வியைத் தவிர்க்க முக்கிய பங்கு வகித்தார்.

இந் நிலையில் இலங்கை அணிக்கு எதிராக இன்று கான்பூரில் ஆரம்பமாகும் 2-வது டெஸ்ட் போட்டியில் சச்சின் டெஸ்ட் கிரிக்கெட் அரங்கில் 13 ஆயிரம் ஓட்டங்களைக் கடப்பார் என ரசிகர்கள் எதிர்பார்த்துள்ளனர்.

# ஐ.சி.சி. டெஸ்ட் தர வரிசையில் முதன்முறையாக மஹேல நம்பர்-1

(டுபாய்)

டெஸ்ட் போட்டியில் சிறப்பாகச் செயற்படும் வீரர்கள் தரவரிசைப் பட்டியலை ஐ.சி.சி. (சர்வதேச கிரிக்கெட் சபை) வெளியிட்டுள்ளது.

இலங்கை-இந்திய அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்டில் இரட்டைச் சதம் (275 ஓட்டங்கள்) அடித்ததால் மஹேல ஜெயவர்த்தன முதலிடத்தைப் பிடித்தார்.

32 வயதான மஹேல ஜெயவர்த்தன முதல் முறையாக முதல் இட வரிசையைப் பெற்றுள்ளார். முதலிடத்திலிருந்த இலங்கை அணித் தலைவர் சங்கக்கார 2-வது இடத்திற்குப் பின்தள்ளப்பட்டுள்ளார்.

அகமதாபாத் டெஸ்டில் சதம் அடித்தும் காம்பீர் பின்தங்கியுள்ளார். 2-வது இடத்திலிருந்து 3-வது இடத்திற்கு பின்தள்ளப்பட்டுள்ளார். மற்ற இந்திய வீரர்களில் டெண்டுல்கர் 15-வது இடத்திற்கு முன்னேறியுள்ளார். ராவிட் 21-வது இடத்திலும் தோனி 30-வது இடத்திலும் உள்ளனர்.

சந்தர்போல் (மேற்கிந்தியத் தீவுகள்)4-வது இடத்திலும் முகமெட் யூசுப் (பாகிஸ்தான்) 5-



வது இடத்திலும் மைக்கெல் கிளார்க் (அவுஸ்திரேலியா) 6-வது இடத்திலும் யூனிஸ்கான் (பாகிஸ்தான்) 7-வது இடத்திலும் சிமித் (தென்னாபிரிக்கா) 8-வது இடத்திலும் பொன்டிங் (அவுஸ்திரேலியா) 9-வது இடத்திலும் கலிஸ் (தென்னாபிரிக்கா) 10-வது இடத்திலும் உள்ளனர்.

பந்து வீச்சில் இந்திய வீரர்களில் ஹர்பஜன் சிங் 6-வது இடத்தில் உள்ளார். 5-வது இடத்திலிருந்து 6-வது இடத்திற்கு அவர் பின் தள்ளப்பட்டுள்ளார். சகீர்கான் 8-வது இடத்தில் உள்ளார்.

தென்னாபிரிக்க வீரர் ஸ்ரெயன் முதலிடத்திலும் முரளிதரன் (இலங்கை) 2-வது இடத்திலும் ஜோன்சன் (அவுஸ்திரேலியா) 3-வது இடத்திலும் உள்ளனர்.

நிற்னி (தென்னாபிரிக்கா), ஸ்டுவெட் கிளார்க் (அவுஸ்திரேலியா) ஆகியோர் முறையே 4-வது, 5-வது இடங்களில் உள்ளனர்.

# கொலிங்வூட்டின் சதம் கைகொடுக்க இங்கிலாந்து அணி அபார வெற்றி



(செஞ்சூரியன்)

2-வது ஒரு நாள் போட்டியில் கொலிங்வூட்டின் அபார சதம் கைகொடுக்க இங்கிலாந்து அணி 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்காவை வீழ்த்தியது.

தென்னாபிரிக்கா சென்றுள்ள இங்கிலாந்து அணி 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட கிரிக்கெட் தொடரில் பங்கேற்று வருகின்றது. முதல் போட்டி மழையால் கைவிடப்பட்டது. 2-வது போட்டி செஞ்சூரியனில் நேற்று முன்தினம் நடந்தது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணித் தலைவர் ஸ்ரொரஸ் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

**பீற்றர்சன் அபாரம்**

தென்னாபிரிக்க அணிக்கு அணித் தலைவர் சிமித் (12), டி வில்லியர்ஸ் (02) ஏமாற்றம் தந்தனர். அரைச் சதம் கடந்த அம்லா (57), டுமினி (41) ஆறுதல் அளித்தனர். பின் வந்த வீரர்களில் அல்விரோ பீற்றர்சன் மட்டும் 64 ஓட்டங்கள் எடுத்தார். மற்ற வீரர்கள் சொதப்ப தென்னாபிரிக்க அணி 50 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 250 ஓட்டங்கள் எடுத்தது.

**அபார வெற்றி**

எட்டக் கூடிய இலக்கை விரட்டிய இங்கிலாந்து அணிக்கு அணித் தலைவர் ஸ்ரொரஸ் (16), பீற்றர்சன் (04) கைகொடுக்கவில்லை. அடுத்து வந்த கொலிங்வூட், டிராட்டுடன் இணைந்து அபார ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

3-வது விக்கெட்டுக்கு 162 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் டிராட் 87 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். மறுமுனையில் சிறப்பான ஆட்டத்தைத் தொடர்ந்த கொலின்வூட் சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் அரங்கில் தனது 5-வது சதம் கடந்து அசத்தினார்.

இங்கிலாந்து அணி 46 ஓவரில் 3 வீக்கெட்டுக்களையிழந்து 252 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது. கொலின்வூட் 105, மோர்கன் 27 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

இதனையடுத்து 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் போட்டித் தொடரில் இங்கிலாந்து அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

## உலக சம்பியன் டெனிஸ்; ரோஜர் பெடரர் தோல்வி



உலகின் முதல் எட்டு வீரர்கள் பங்கேற்கும் ஏ.ரி.பி. உலக சம்பியன் டென்னிஸ் தொடர் லண்டனில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

இத் தொடரில் உலக சம்பியன் வீரரான சுவிஸ்சர்லாந்தின் ரோஜர் பெடரல், றொபின் சுற்றில் ஸ்பெயினின் பெர்ணான்டோ வெர்டஸ்கோவிடம் தோல்வியடைந்துள்ளார்.

பெர்ணான்டோவிடம் 4:6, 7:5, 6:1 என்ற செட் கணக்கில் பெடரர் தோல்வியைத் தழுவினார்.

## கிளிநொச்சிசாலை முதலாம் திகதி முதல்

வடபிராந்திய போக்குவரத்து சபையின் கிளி நொச்சி சாலை எதிர்வரும் முதலாம் திகதி முதல் ஆரம் பிக்கப்படவுள்ளதாக வடபிராந் திய போக்குவரத்துச் சபையின் பிரதான முகாமையாளர் கணேசபிள்ளை தெரிவித்தார். முதல் தடவையாக எதிர்வரும் முதலாம் திகதி யிலிருந்து கிளிநொச்சியிலுள்ளக சேவை யிலும் வவுனியாவுக்கான சேவையிலும் ஈடுபட 5பஸ் கள் கிளி நொச்சி சாலைக்கு வழங்கப்பட்டுள்ளது என தெரிவித் தார். (ச)

# எலி மற்றும் டெங்கு காய்ச்சலினால் நாடுமுழுவதிலும் 411 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

எலிக்காய்ச்சல் மற்றும் டெங்குக் காய்ச் சல் காரணமாக 411பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.

நாடு முழுவதும் எலிக்காய்ச்சல் காரண மாக 4ஆயிரத்து 210பேர் பாதிக்கப்பட்டுள் ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

லப்டொஸ் பைரோஸிஸ் எனப்படும் எலிக் காய்ச்சலினால் இது வரை 131 பேர் உயிரிழந் துள்ளனர்.எலி,நாய்,பூனை, ஆடு உட்பட வீட் டுப் பிராணிகள் சிறுநீர் கழிக்கும் இடமே இந்த நோய்களிற்கான பக்றீரியாக்கள் உருவாகும் இடமெனசுகாதாரஅதிகாரிகள்தெரிவிக்கின்றனர்.

உடலில் காணப்படும் காயங்களுடாக உடலினுள் இந்த பக்றீரியாக்கள் உட்புகக் கூடுமென சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின் றனர்.எலிக்காய்ச்சல் தொற்றைக் கட்டுப்படுத்த பயோரைட் எனப்படும் பக்றீரியாவை இறக் குமதி செய்வது குறித்து கவனம் செலுத்து வதாக சுகாதர அமைச்சர்நிமல்ஸ்ரீபாலடீசில்வாதெரிவிக்கிறார்.

எலிக்காய்ச்சலைக் கட்டுப்படுத்த கியூபா ஒருவகை பக்றீறியாக்களை கையாள்கிறது. ஒரு எலி இந்த பக்றீறியாவை உண்டவுடன் இந்த பக்றீறியா ஏனைய எலிகளையும் சென் றடையும் ஒரு முறைமையே அங்கு பின்பற்றுவ தாக அவர் கூறினார்.அதை இங்கு கொண்டுவர தான் தயாராக உள்ளதாகவும் ஆனால் அதற் கான அனுமதி உரிய முறையில் கிடைக்க வேண்டுமெனவும் சுகாதார அமைச்சர் தெரி வித்தார்.

இதேவேளை டெங்கு நோய் காரணமாக 280பேர் உயிரிழந்துள்ளதுடன் 29ஆயிரத்து 960பேர் டெங்கு நோயாளர்கள் இனங்காணப் பட்டுள்ளனர்.

டெங்கு நோயைக் கட்டுப்படுத்த வி.ரி.ஐ.பக் ரீறியாக்களை பயன்படுத்துவது ஒரு கட்டுப்படுத் தும் நடவடிக்கையே மட்டுமே என சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டுகின்றது.

எதிர்வரும் ஜனவரி மாதம் தெரிவு செய் யப்பட்ட சில இடங்களில் வி.ரி.ஐ பக்ரீறியாக் களை பயன்படுத்த உள்ளதாக சுகாதார அமைச்சர் கூறினார். (ச-3)

## இலங்கை அரசு மீது அழுத்தம்...

அமெரிக்கா சென்றுள்ளார். இன்று அவர் அதிபர் பராக் ஒபாமாவைச் சந்தித்துப் பேசு கிறார். இந்தச் சந்திப்பில் தீவிரவாதம், கால நிலை மாற்றம், பொருளாதார மந்த நிலை மற்றும் ஆப்கானிஸ்தான் உள் ளிட்ட பிராந் திய விவகாரங்கள் என்பன குறித்து இரு தலைவர்களும் கலந்துரையாட உள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மன்மோகன் சிங், வாசிங்டன் வந்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் அவரிடம் மனித உரி மைகள் விவகாரம் குறித்து அமெரிக்க அதி பர் பராக் ஒபாமா அழுத்தம் கொடுக்க வேண் டும் என்று அனைத்துலக மன்னிப்புச் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

மன்னிப்புச் சபையின் சார்பில் அதன் அமெரிக்கக் கிளையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் லாறி கொக்ஸ் ஒபாமாவுக்கு நீண்ட கடிதம் ஒன்றை எழுதி உள்ளார். அந் தக் கடிதத்திலேயே அவர் இலங்கை விவகா ரம் குறித்தும் வலியுறுத்தியுள்ளார்.

போரினால் இடம்பெயர்ந்த தமிழ் மக் களை ஆறு மாதங்களுக்குள் அவர்கள் அடைத்து வைக்கப்பட்டுள்ள தடுப்பு முகாம் களில் இருந்து விடுவிப்பதாக இலங்கை அரசு இந்தியாவிற்கு உறுதி அளித்திருந்தது. ஆனால் ஆறு மாதங்கள் முடிபடைந்து விட் டன. எனினும் பல பத்தாயிரக் கணக்கான மக்கள் இன்னும் இராணுவத்தினரால் நடத் தப்படும் தடுப்பு முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தனது உறுதிமொழியை நிறைவேற்றும் படி இலங்கைக்கு அழுத்தம் கொடுக்குமாறு பிரதமர் மன்மோகன் சிங்கிடம் நீங்கள் (ஒபாமா) கேட்க வேண்டும்.

விடுதலைப்புலிகளுடன் தொடர்பு பட்டிருந் தவர்கள் என்ற சந்தேகத்தில் சிறுவர்கள் உட் பட 12 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேணடும். அனைத்துலக செஞ்சிலுவைக் குழுவினர் அவர்களைத் தொடர்பு கொள்வதற்கும் சட்ட ஆலோசனைகள் அவர்கள் பெறுவதற்கும் கூட அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள் ளது.

இந்த மனித உரிமை விவகாரங்கள் குறித்து இந்தியாவிடம் கருத்துக் கூறுவதற்குக் கிடைத்துள்ள இந்த அரிய சந்தர்ப்பத்தை நீங் கள் தவறவிடாதீர்கள் என்று அதிபராகிய உங் களிடம் கேட்டுக் கொள்கிறோம் என தனது கடிதத் தில் லாறி கொக்ஸ் தெரிவித்துள்ளார். (ச-5)

## வன்னிக்கு திரும்புமாறு அழை...

கிளிநொச்சி, துணுக்காய் வலயக் கல்வி அலு வலகங்களில் கடமையாற்றிய இரு சாரதிகள் உட்பட ஊழியர்கள், உத்தியோகத்தர்கள் அனை வரையும் உடனடியாகக் கடமைக் குத் திரும்புமாறு வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் பணிப்பு விடுத்திருந்தார். அத் துடன் சிலருக்குத் தனித் தனிகடிதங்களும் அனுப்பிவைக்கப்பட்டிருந்தன.

அதற்கு அமைய தேசிய அடையாள அட் டையின் மூன்று நிழற்பட பிரதிகளுடன் பய ணிக்க இருந்த குறித்த உத்தியோகத்தர்க ளுக்கு பயண அனுமதி மறுக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து இவர்கள் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரிடம் தொடர்பு கொண்டபோது அரச அதிபரிடம் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது. அதற்கு அமைய அரச அதிபரிடம் இவர்கள் தொடர்பு கொண்டபோது, வன்னிக்கு கடமைக்குத் திரும்பிச் செல்பவர்களின் பட்டியல் ஒன்றி னைத் தருமாறும் அதனைப் படையினரிடம் அனுப்பி அனுமதி பெற்றுத் தருவதாகவும் உறுதியளிக்கப்பட்டது.

துணுக்காய் கல்வி வலயத்தில் யோகபுரம் மகாவித்தியாலயம், வவுனிக்குளம் படிவம் அ.த.க பாடசாலை போன்றன தற்போது 700 மாணவர்களுடன் அங்கு இயங்கி வருகின்றன. இங்கு கடமையாற்றிய ஆசிரியர்களும் உடன டியாக கடமைக்குத் திரும்பு மாறும் இவர் களுக்கான சம்பளம் அங்கு வைத்தே வழங் கப்படும் எனவும் மாகாணக் கல்விப் பணிப் பாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை வன்னியில் நலன்புரி நிலையங்களில் இருந்து விடுக்கப்பட்டவர் களுக்கு தமது சொந்த இடத்துக்கோ அல்லது முன்னர் தொழில் புரிந்த நிலையத்துக்கோ செல்ல அனுமதி வழங்கப்படவில்லை என்ப தும் குறிப்பிடத்தக்கது. (ச-5)

## பொதுச்சின்னத்தில் போட்டி...

ல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்க்கட்சிகளின் பொதுக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சிறிய கட்சியொன்றின் சின்னத்தில் சரத் பொன்சேகாவை தேர்தலில் களமிறக்குவது குறித்து நடத்தப்பட்ட பேச்சு வார்த்தைகள் முடிபடைந்துள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி., சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவு, ஜனநாயக மக்கள் முன்னணி ஆகிய பிரதான எதிர்க்கட்சிகளின் சின்னத்தில் போட்டியிடாது அனைவராலும் அங்கீகரிக்கப்பட்ட பொதுச்சின்னத்தில் சரத் பொன்சேகா ஜனாதிபதித் தேர்தலில் போட்டி யிட உள்ளார்.

ஜே.வி.பி. புதிய கட்சியொன்றினை பதிவு செய்து சின்னம் ஒன்றை பெற்றுக் கொள்ளும் நோக்கில் கட்சியொன்றை பதிவு செய்ய விண் ணப்பித்திருந்த போதிலும் தேர்தல் ஆணை யாளர் அதனை நிராகரித்ததை தொடர்ந்து பொது வேட்பாளரை களமிறக்கும் பொதுச் சின் னம் தொடர்பில் சிக்கல் நிலைமை ஏற்பட்டது.

இந்த நிலையில் பொதுச் சின்னத்தில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சரத் பொன்சேகாவை சிங்கள,தமிழ் மற்றும் முஸ் லிம் மக்கள் மத்தியில் பிரபலப்படுத்தும் பிர சாரப் பணிகளை மேற்கொள்ள எதிர்க்கட்சி கள் திட்டமிட்டுள்ளன.

தேர்தல் குறித்த அறிவிப்பை தேர்தல் ஆணையாளர் வெளியிட்டப் பின்னர் சரத் பொன்சேகாவின் பெயர் மற்றும் தேர்தல் சின் னம் ஆகியன குறித்து அறிவிக்க எதிர்க்கட்சி கள் ஏகமனதாக தீர்மானித்துள்ளன. (ச-5)

## ஜே.வி.பி.-ஜெனரல் பொன்...

களமிறங்கும் இணக்கப்பாடுகள் குறித்து இதன்போது பேசப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதேவேளை முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவுடன் மட்டும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும் என ஜே.வி.பி. கட்சி அறிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் பொதுவான ஓர் வேட்பாளரை அறிவிப்பது தொடர்பில் ஏனைய கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட மாட்டாது என ஜே.வி.பி. கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஏனைய கட்சிகளில் எவ்வாறான பிரச் சினை நிலவுகின்றது என்பது தொடர்பில் தாம் கவலைப்படவில்லை என அவர் தெரிவித்துள் ளார்.

எதிர்க்கட்சிகளின் பொதுவான வேட்பாள ராக களமிறங்கக் கூடிய தகுதியுடைய வேட் பாளருடன் மட்டும் ஜே.வி.பி. பேச்சுவார்த்தை நடத்தும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## ஜனாதிபதித் தேர்தலே முதலில்...

இலங்கை ஜனாதிபதியின் ஆட்சிக் கால மாகிய 6 வருடங்கள் முடிபடைவதற்கு இன் னும் 2 வருடங்கள் இருக்கின்ற நிலையில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு, முடிபு செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப் பட்டிருக்கி றது.

ஆளும் கட்சியாகவே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிக் கட்சிக ளின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட ஒரு சந் திப்பில் ஜனாதிபதி தேர்தலுக்கு ஆயத்த மாகும்படி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று அறிவித்திருக்கிறார்.

இந்தத் தகவலை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் நாயகம் சுசில் பிரேம ஜெயந்த உறுதி செய்திருக்கிறார்.

இலங்கை அரசியலமைப்பிற்கு அமைய ஜனாதிபதி ஒருவர் ஆட்சிக்கு வந்து 4 வருடங் கள் முடிபடைந்த நிலையில் தேவையான நேரத்தில் ஆட்சியிலுள்ள ஜனாதிபதி ஒருவர். ஜனாதிபதிக்கான, தேர்தலை நடத்த முடியும்.

இந்த விதிக்கு அமைய ஜனாதிபதி மகி ந்த ராஜபக்ஷ இரண்டாம் முறையாக மக்க ளின் ஆணைய்ய பெறமுடியும் என நம்பிக் கை கொண்டிருக்கின்றார்.

இதன் அடிப்படையில் தேர்தலுக்காய் ஏற் பாடுகளைச் செய்யுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 'ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக் கட்சியின் முக்கியஸ்தர்களுக்கும் தேர்தல் ஆணையாளருக்கும் அறிவித்திருப் பதாக சுசில் பிரேம ஜெயந்த அவர்கள் கூறு யிருக்கிறார்.

இது குறித்து ஜனாதிபதி என்ற முறையில் அரசியல் அமைப்பில் உள்ள அதிகாரத் திற்கு அமைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி யின் கட்சிப் பிரமுகர்கள் அரசியல்வாதிகளுக் கும், தேர்தல் ஆணையாளருக்கும் ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்திருக்கிறார்.

இதனை அடுத்து ஜனாதிபதி தேர்தலுக் கான திகதி மற்றும் ஏற்பாடுகளுக்கான நட வடிக்கைகளை தேர்தல் ஆணையாளர் இன்று அறிவிப்பார். (ச-3,5)

## இலங்கையில் தேர்தல் முடி...

படையான வடக்குக் கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டு தனியான ஒரு அலகாக மாற்றப்படுவது அவசியமாகின்றது.

எனினும் 1987ஆம் ஆண்டு இலங்கை-இந்திய (ராஜீவ்-ஜெயவர்த்தன) ஒப்பந்தத்தின் கீழ் இணைக்கப்பட்ட இந்த இரு மாகாணங் களும் 2006ஆம் ஆண்டு நீதிமன்றத் தீர்ப் பின் மூலம் பிரிக்கப்பட்டுள்ளன.

எனினும் அவற்றை ஜனாதிபதிக்குள்ள அதிகாரங்கள் மூலமும் நாடாளுமன்றத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடனும் நிரந்தமாக இணைக்குமாறு இந்தியா மகிந்த ராஜபக்ஷவை வலியுறுத்தியுள்ளது.

வடக்குக் கிழக்கை தனித்தனியாக வைத் துக் கொண்டு அரசியல் தீர்வினை முன் வைக்க முடியாது என்பதே இந்தியாவின் நிலைப்பா டாகவுள்ளது.வடக்குக்கிழக்கை இணைப்ப தன் மூலம் பெரும்பாலான தமிழ் அரசியல் கட்சிகளை திருப்திப் படுத்திவிட முடியும் என் பதால் இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் என்று இந்தியா கருதுகின்றது.

இதனைப் பிரணாப் முகர்ஜி தனது அண் மைய இலங்கை விஜயத்தின் போதும் மகிந்த ராஜபக்ஷவிடம் தெளிவுபடுத்தியுள்ளார்.

வடக்குக்கிழகை இணைப்பதற்கு இணங் கினால் எதிர்வரும் தேர்தல்களில் இந்தியா வின் ஆதரவு மகிந்த ராஜபக்ஷவுக்கு கிடைக் கும் என்றும் உறுதியளிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

வடக்குக் கிழக்கிணைப்பு என்பது தமது தேர்தல் வெற்றிகளை பாதிக்கும் என்பதால் தேர் தல்கள் முடிந்தபின்னர் அவற்றை இணைப்பதாக மகிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கு உறுதிய ளித்துள்ளதாகவும் தெரியவந் துள்ளது. (ச-5)

## முப்படைகளும்...

ஓரங்களில் பொலிஸ் பாதுகாப்பை அதி கரித்துள்ளதாக செய்திகள் தெரிவிக் கின்றது. எதிர்வரும் மாவீரர்நாளை முன்னிட்டு முப்ப டைகளையும் தயார் நிலையில் வைத் திருக் குமாறு கோத்தபாய கட்டளை பிறப்பித்து இருக்கின்றார்.

கடல் வழியாக விடுதலைப்புலிகள் வந்து திடீர் தாக்குதலில் ஈடுபடலாம் என்ற பீதியும் சிங்களவர்கள் மத்தியில் இருப்பதாக தெரி விக்கப்படுகின்றது. (ச-5)

## மரண அறிவித்தல்



செங்குந்தர் வீதி, கரவெட்டி கிழக்கு, கர வெட்டியைப் பிறப்பிடமாகவும் நோர்வே யை வசிப்பிடமாகவும் கொண்ட

**நடேசு-பரஞ்சோதி**

(பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை முன்னாள் உத்தியோகத்தர்)

*22.11.2009* ஞாயிற்றுக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னாரது உடலம் அவர் இறுதியாக வசித்த கத்தாப்படி வீதி, நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி எனும் முகவரியில் அஞ்சலிக் காக வைக்கப்பட்டுள்ளது.

தகவல்: நண்பர்கள்

T.P:.0771606957

(C-3772)

## ஊடக பிர...

மகிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதித்தேர்தல் குறித்து அறிவித்த பின்னர் நடைபெற இருக்கும் முத லாவது உத்தியோக பூர்வசந்திப்பு இது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பின்போது அரசாங்கத்தின் நல திட்டங்கள் குறித்த பிரசாரங்களுக்கு முன் னுரிமை வழங்குமாறு ஜனாதிபதி ஊடகங் களிடம் கோரலாம் என கருதப்படுகிறது. (ச-5)

வர்ணக் கலண்டர் மலிவு விலையில்
அழகிய வர்ணக் கலண்டர்கள் வர்த்தக விளம்பரம் பொறித்து மலிவு விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்
சரவணா அச்சகம்
233, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(C-3774)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.11.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.